இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

ஏப்ரல் 2023 April | இதழ் 386 Issue

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991



Premier Canadian Tamil Journal




கனடா கலைமன்ற ‘சங்கத் தமிழ்’ நாட்டிய நாடகம்



பெண்கள் தின ‘பறை’ இசை




யாழ்ப்பாணம் சர்வதேச பயணம்

## New Canadian Citizens could take the oath on their own

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

33 வது ஆண்டில் 33rd Year

Growing with the Community ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

தொலைபேசி:
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன்கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்
www.tamilsinformation.info

ஆசிரியரிடமிருந்து... *From the Editor*

# வளரும் 'வாதம்' !

உலகம் முழுவதும் அண்மைக்காலத்தில் வெகுதீவிரமாய் பரவி வரும் நோயாக 'வாதம்' காணப்படுகிறது.

மருந்துகளாலோ மருத்துவர்களாலோ இதற்குச் சிகிச்சையளித்து தீர்வு காண முடியாது. இது உடலுடன் சம்பந்தப்பட்ட வாதமன்று.

பொதுவாக வாதம் என்றதும் உடல் உறுப்புகளில் ஏற்படும் பக்கவாதம், பாரிசவாதம் போன்றவைகளே நினைவுக்கு வரும். ஆனால் இன்று பரவும் வாதம் பல வகையானது. இனம், மதம், மொழி, வாழும் நாடு என்பவை - களைக் கடந்து சர்வதேச தொற்றாக இந்த 'வாதம்'கள் காணப்படுகின்றன.

இவைகளுள் முதன்மையான இனவாதம் பழமையானது. நாங்கள் பிறந்து வளர்ந்த இலங்கையில் பேரினவாதம் தலைவிரித்தாடியதால்தான் லட்சக்கணக்கான எம்மக்கள் அகதிகளாக புகலிடம் தேட நேர்ந்தது.

ஆனால், சர்வதேச ரீதியில் ஆகக்கூடுதலான வெளிநாட்டவரை - அகதி - களாக உள்வாங்கி வாழ்வமைத்துக் கொடுத்திருக்கும் கனடாவில் புதிய 'வாதம்'கள் பல முனைகளில் தாக்க ஆரம்பித்திருப்பதை அதிகாரபூர்வ தகவல்கள் தெரியப்படுத்துகின்றன.

கடந்த மாதம் வெளியான அறிக்கையொன்று கனடாவில் இனவாதம், மதவாதம், நிறவாதம், பாலினவாதம், மொழிவாதம், தீவிரவாதம் என்பவை தனித்தும், ஒன்றோடொன்று இணைந்தும் இயங்குவதைச் சுட்டியுள்ளது.

இனவாதம் கண்களுக்குப் புலப்படும் வகையிலும், புலப்படாத வகையிலும் - சிலசமயம் மறைகாட்சியாகவும் செயற்படுகிறது. எம்மவர்கள் கனடாவில் குடியேறிய ஆரம்ப காலங்களில் கல்விக்கூடங்களிலும், தொழிலகங்க - ளிலும், பொது நிகழ்வுகளிலும் இனவாதம் ஏற்படுத்திய பாதிப்பு பலவகையாக அடையாளப்படுத்தப்பட்டது.

இதனை இல்லாமற் செய்ய சமூகம் சார்ந்த பல போராட்டங்களை எம்மவர் நடத்தியதை இலகுவாக மறந்துவிட முடியாது. இப்போது பகிரங்கமாக இங்கு பல 'வாதம்'களும் றொக்கட் வேகத்தில் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன.

சில வாரங்களுக்கு முன்னர் ரொறன்ரோ பெரும்பாகத்தில் இந்து ஆலயமொன்று இலக்கு வைத்து தாக்கப்பட்டது. அதற்கு முன்னராக சீக்கியர்களதும், இஸ்லாமியர்களதும் வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மசூதி ஒன்றின் பணியாளர் கொல்லப்பட்டது முக்கியமானது.

கடந்த மாதத்தில் மகாத்மா காந்தி சிலையொன்று சிதைக்கப்பட்டது மட்டுமன்றி காந்தியின் கைகளில் காலிஸ்தான் கொடி நிறுத்தப்பட்டது.

இதுவே தொடர்கதையாகுமானால் சிறுபான்மையினர் - முக்கியமாக ஆசிய நாட்டவர் பெருமளவில் பாதிக்கப்படலாமென்ற அச்சம் மேலோங்குகிறது.

ரூடோ அரசாங்கம் கனடாவுக்குள் சீனாவை நுழைய விட்டதுபோல, 'வாதம்'களைப் பரவ விடுமானால் அது நாட்டுக்கே ஆபத்தாகும்!

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

E-mail
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
R. R. Rajkumar

Public Relation
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Website
www.tamilsinformation.info

# ரொறன்ரோ மேயர் பதவி யாரைத்தான் விட்டது பெரிய கதிரை ஆசை!




ஜோன் ரோறியின் பதவி விலகலால் காலியான ரொறன்ரோ மேயர் பதவிக்கு ஜூன் மாதம் 26ம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த மாதம் (ஏப்ரல்) 3ம் திகதி ஆரம்பமான வேட்பாளர் நியமனத் தாக்கல் அடுத்த மாதம் (மே) 12ம் திகதியுடன் முடிவடையும்.

வழமையாக நகரசபைக்கான தேர்தலின்போது ஒரு வாக்கு அட்டையில் மேயர், சபை அங்கத்தவர்கள் (கவுன்ஸிலர்கள்), கல்விச்சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கான தெரிவு இடம்பெறும். ஆனால், ஜூன் 26ம் திகதி நடைபெறுவது மேயர் தெரிவுக்கான தேர்தல் என்பதால், பலருக்கு பதவிக் காய்ச்சல் பீடித்துள்ளது.

தற்போது நகரசபை உறுப்பினராக இருப்பவர்கள், முன்னாள் உறுப்பினர்கள், ஏற்கனவே தேர்தலில் போட்டியிட்டு தோற்றவர்கள், ஓய்வு பெற்ற அரசியல்வாதிகள், கனடிய மத்திய அரசு எம்.பிக்கள், ஒன்ராறியோ மாகாண அரசின் உறுப்பினர்கள் எனப்பலர் களத்தில் குதிக்க வரிசையாக நிற்கின்றனர்.

வேட்பாளர் நியமனம் ஏப்ரல் 3ம் திகதியே ஆரம்பமாகியதெனினும், சில முக்கியஸ்தர்களின் பெயர்களை மையப்படுத்தி ஏற்கனவே கருத்துக் கணிப்புகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. 14 ஆண்டுகள் ரொறன்ரோவின் சபை உறுப்பினராகவும் எட்டு வருடங்கள் எம்.பியாகவும் இருந்த ஒலிவியா சௌ (காலஞ்சென்ற என்.டி.பி. தலைவர் ஜாக் லெய்ட்டனின் மனைவி), ரொறன்ரோ பொலிஸ் தலைமை அதிகாரியாக ஐந்து வருடங்கள் பணியாற்றிய மார்க் சௌன்டஸ் ஆகிய இருவரும் போட்டியிட்டால், ஒலிவியா சௌ முன்னணியில் நிற்பாரென கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

# பிரஜாவுரிமை உறுதிமொழி நிகழ்வு நிரந்தரமாக ரத்தாகிறது! ஜூன் மாதத்திலிருந்து சுயஉறுதி முறை!

## Soon a Canadian citizenship oath could be just a scroll

கனடிய பிரஜாவுரிமை (Canadian Citizenship) பெறுபவர்கள் பிரஜாவுரிமை நீதிபதி முன்னிலையில் உறுதிமொழி எடுத்து பிரஜாவுரிமை பத்திரத்தைப் பெறும் வழக்கமான நடைமுறை ரத்துச் செய்யப்படவுள்ளது. கிடைக்கும் தகவல்களின்படி இவ்வருட ஜூன் மாதத்துடன் இந்த நடைமுறை ரத்தாகும்.

இதற்குப் பதிலாக, பிரஜாவுரிமை பெறுவதற்கு தகுதியானவர்கள் சுயமாக உறுதிமொழி எடுக்கக்கூடியதாக மாற்றம் ஏற்படவுள்ளது. பிரஜாவுரிமை விண்ணப்பங்கள் பரிசீலனைக்குள்ளாவதற்கு 2 - 3 வருடங்கள்வரை ஏற்படும் தாமதத்தினால் உருவாகும் தேக்க நிலையை போக்க இப்புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இதற்கான அறிவித்தல் ஏற்கனவே கனடிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பொதுமக்களினதும் அமைப்புகளினதும் கருத்துகள் அறியப்பட்டது. புதிய திட்டம் நடைமுறைக்கு வரும் வேளையில் விண்ணப்பங்களை நவீன மயமாக்கல் மற்றும் டிஜிட்டல் முறைகள் வழியாக மூன்று மாதங்கள் முதல் இருபத்தொரு மாதங்களில் பரிசீலிக்கப்படுமென நம்பப்படுகிறது.

1947ம் ஆண்டிலிருந்து பிரஜாவுரிமை நீதிபதி முன்னிலையில் உறுதிமொழி எடுத்து அதற்கான சான்றிதழைப் பெறுவது நடைமுறையிலிருந்து வருகிறது. இந்த உறுதிமொழியானது கனடாவின் சட்டங்களைப் பின்பற்றுவதற்கும், குடிமக்கள் என்ற வகையில் அவர்கள் தங்கள் உரிமைகளைப் பேணவும் தங்கள் கடமைகளைச் செய்யவும் வழிகாட்டுவதாகும்.

Starting as soon as June, new Canadian citizens could take the oath on their own — without the need for a citizenship judge. The proposed change is an attempt by immigration officials to reduce processing time and backlogs. The change, as part of the modernization and digitalization of immigration processing, is expected to reduce the current citizenship processing time by three months to 21 months, according to the plan published in the Canada Gazette.

Swearing an oath has been a legal requirement of becoming a citizen in this country since 1947. It's a solemn vow taken by citizenship applicants to follow the laws of Canada and fulfil their duties as citizens. Under the proposed change, the immigration minister would have broad discretion to allow citizenship applicants to take the oath by other means and not necessarily before an authorized individual.

கனடிய பிரஜை ஒருவர் தம்மை கனடியர் என்று எண்ணுவதற்கும் இந்த நாட்டுக்காக தம்மை அர்ப்பணிப்பதற்கு அழைத்துச் செல்வதாகவும் அமைந்துள்ள உறுதிமொழி நிகழ்வு ரத்தாவதையிட்டு பல தரப்பிலிருந்தும் ஆட்சேபணை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பிரஜாவுரிமை நிகழ்வுகளில் கலந்து கொண்டு சத்தியப்பிரமாணம் செய்பவர்களுக்கு பிரஜாவுரிமை படிவத்துடன் கனடிய பிரதமரின் ஒப்பமிடப்பட்ட வாழ்த்துக் கடிதமும் வழங்கப்படுவது வழக்கம். இந்நிகழ்வுக்காக தங்கள் பணியிடங்களில் விடுப்பு எடுப்பது, நீண்ட தூரத்துக்குப் பயணிப்பது போன்ற கஸ்டங்களை புதிய நடைமுறை நீக்குகின்றது.



கனடிய பிரஜாவுரிமை பெறுவோர் தொகை கடந்த இருபது ஆண்டுகளில் கணிசமாக குறைந்து வருகிறது. கனடாவில் குடியேறி முதல் பத்து ஆண்டுகளில் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை 2021ம் ஆண்டில் 45.7 வீதம் குறைந்தது. இது 2016ம் ஆண்டில் விண்ணப்பித்தவர்களைவிட சுமார் 60 சதவீதம் குறைவாகும்.





றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கடந்த மாதம் சில நாட்கள் வானத்திலிருந்து 'புழு மழை' பொழிந்து பலரையும் அதிர்ச்சியடையச் செய்தது. வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மழையுடன் பெய்த புழுக்களால் மூடப்பட்டிருந்தன. இவைகள் புழுக்கள் அல்ல என்றும் கம்பளிப் பூச்சிகள் என்றும் நகர நிர்வாகம் தெரிவித்ததாயினும் பொதுமக்கள் அதனை நம்பவில்லை.

கனடாவில் வங்குரோத்து நிலையை (Bankrupcy) பிரகடனம் செய்வோரின் எண்ணிக்கை பெருமளவில் இப்போது அதிகரித்து வருகிறது. வணிகத்துறையில் ஈடுபடுபவர்கள் மட்டுமன்றி பெருமளவான தனி ஆட்களும் வங்குரோத்து செய்கின்றனர். சென்ற வருட ஜனவரியைவிட இவ்வருட ஆரம்பத்தில் வங்குரோத்து செய்தோர் எண்ணிக்கை 31 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் உடல் பருமன் அதிகரிப்பு, நிறை அதிகரிப்பு கூடுதலாகி வருவதை உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த அதிகரிப்பு இப்போதைய நிலைப்பாட்டில் தொடருமானால் 2035ம் ஆண்டில் உடல் பருமனுள்ளவர்களின் எண்ணிக்கை தற்போதையதைவிட இரு மடங்காக அதிகரிக்குமாம். பேரிடர்கால உணவுப் பழக்கம், மனஉளைச்சல், அங்கலாய்ப்பு, உடற்பயிற்சியின்மை ஆகியவை இதற்குக் காரணமென கூறப்படுகிறது.

தாயின் கருவிலிருந்த குழந்தை ஒன்றுக்கு இருதய சிகிச்சை செய்யப்பட்டு அதிலிருந்த அடைப்பு வெற்றிகரமாக நீக்கப்பட்டுள்ளது. அல்ட்ராசவுண்ட் வழிகாட்டலுடன் புதுடில்லியிலுள்ள எயிம்ஸ் மருத்துவமனை சிகிச்சை நிபுணர்கள் இதனை மேற்கொண்டனர். 28 வயதான 3 பிள்ளைகளின் தாய் ஒருவரின் கருவறைக்குள் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது உலகில் இதுவே முதன்முறை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையான பாக்குநீரிணையை இந்தியாவின் ஏழு நீச்சல் வீரர்கள் கூட்டாக நீந்தி சாதனை படைத்துள்ளனர். சுமார் 36 கிலோமீற்றர் தொலைவான இந்த நீரிணையை இவர்கள் நீந்திக் கடக்க இந்திய வெளியுறவுத்துறையும் இலங்கைத் தூதரகமும் அனுமதி வழங்கியதுடன் கண்காணிப்பும் மேற்கொண்டன. சாதனை படைத்த 7 நீச்சல் வீரர்களில் மூவர் இளம்பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவில் பாலர் பாடசாலைகளில் அனுமதி பெறும் மாணவர் தொகை இவ்வருடம் வெகுவாகக் குறைந்துள்ளது. இது இந்நாட்டின் பிறப்பு வீதக் குறைவினை வெளிக்காட்டியுள்ளது. கடந்த இருபது வருடங்களில் இதுவே முதன்முறையாக மிகக்குறைவான சிறார் பாடசாலை அனுமதி பெற்றுள்ளனர். 2022ல் 289,200 ஆக இருந்த பாடசாலை சிறாரின் அனுமதி எண்ணிக்கை இவ்வருடம் சுமார் 50,000 இனால் குறைந்துள்ளது.

## தபால் பெட்டிகளுக்கு இப்படியொரு நிலை !




ரொறன்ரோ வீதிகளிலுள்ள தபால் பெட்டிகளை பயன்படுத்துவதை தற்காலிகமாக நிறுத்துமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பல வீதிகளில் நிறுவப்பட்டுள்ள தபால் பெட்டிகள் திட்டமிட்டு உடைக்கப்பட்டும் தகர்க்கப்பட்டும் வந்ததே இதற்கான காரணம். பேரிடர்கால தாக்கத்தால் வீதிகளில் தங்கி வாழும் குறிப்பிட்ட சிலர் தபால் பெட்டிகளை இலக்கு வைத்து உடைத்து தகர்த்துள்ளனர். இதனால் கடந்த விடுமுறை காலத்தின்போது பெருந்தொகையான கடிதங்கள் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படவில்லையென முறையிடப்பட்டது.

ரொறன்ரோவின் பூங்கா ஒன்றில் விநியோகிக்கப்படாத நூற்றுக்கணக்கான கடிதங்கள் குவிக்கப்பட்டிருந்தது தபால் இலாகாவினால் கண்டுபிடிக்கப்பட்டது. கடிதங்களை நேரடியாக தபாலகங்களில் கையளிக்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். உடைக்கப்படாத நல்ல நிலைமையிலுள்ள தபால் பெட்டிகளையும் எவரும் பயன்படுத்த முடியாதவாறு மூடிக்கட்டி வைத்துள்ளது தபால் நிர்வாகம்.

## பாரம்பரிய கட்டிடங்களின் எதிர்காலம் கேள்விக்குறி !

ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள நூற்றுக்கணக்கான பாரம்பரிய கட்டிடங்களின் (Heritage builings) எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. இவைகளை பயன்படுத்த முடியாதவாறு சில காலமாக இவை மூடி பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இப்போது இக்கட்டிடங்கள் பலத்த வெடிப்புகள் மற்றும் இடிபாடுகளுடன் காணப்படுவதால் இவைகளை பராமரிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. இவ்வாறான பாரம்பரிய கட்டிடங்களுக்கு அருகாமையில் இவற்றுடன் ஒட்டியதாகக் காணப்படும் பல கட்டிடங்கள் அண்மைய நாட்களில் தகர்க்கப்பட்டு உயர்மாடிக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் பாரம்பரிய கட்டிடங்களின் அத்திவாரமும், மேற்பகுதிகளும் நிலைத்திருக்க முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன. இதனால் பாரம்பரிய கட்டிடங்களின் எதிர்காலத்தை மாகாண மற்றும் நகர நிர்வாகங்கள் விரைந்து தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்படுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்

# உலக அரங்கில் நீதி கோரும் நிற, இன வர்க்கப் பாகுபாடுகள்



## ஊரும் உலகும் - 15

தமிழ் இனம் உள்ளடங்கலாக பழமையும் பெருமையும் மிக்க பல இன, நிற மொழிக் குழுமங்களில் நீண்ட காலமாக புரையோடியுள்ள சில பிரச்சனை மையங்கள் இன்று உலக அரங்கில் நீதிகோரி வேற்றுருவில் மேற்கிளம்பி வருகின்றன.

கற்றவர்கள் மற்றவர்கள் என்ற பேதமின்றிப் பொதுவெளியில் நூற்றாண்டுகள் பலவாக பேசாப் பொருளாக மூடி மறைக்கப்பட்ட இவை இன்று உலக நாடுகளில் நேர்நிலையான பேசுபொருளாக உயிர் பெற்றுள்ளன.

வருணாச்சிரம வகைப்படுத்தல் முதல் வர்க்க வேறுபாடுகள் ஈறாக, இனப்பாகுபாடு துவக்கம் நிறத்துவேசம் வரையாக வளர்ந்துள்ள பல்வேறு சமூக - சமுதாய படிமுறை உட்பிரிவு - கள் மனிதாபிமானமற்ற பல்வேறு ஒதுக்குமுறைகளையும் ஒடுக்கு முறைகளையும் தாம் குடிபுகுந்த நாடுகளிலும் தொடரச் செய்கின்றனர் என சர்வதேச வார இதழான டைம் (பெப். 21) அண்மையில் பதிகை செய்தது.

“இந்துக்கள் பூமியில் உள்ள மற்ற பகுதிகளுக்கு குடிபெயர்ந்தால், “சாதி” ஒரு உலகப் பிரச்சனையாக மாறும்” என அறிஞர் அம்பேத்கர் கூறியதை சுட்டிக்காட்டி நாலு மில்லியனுக்கும் அதிகமான இந்திய-அமெரிக்கர்கள் ஐக்கிய அமெரிக்காவில் வாழ்கின்றனர் எனவும், வர்க்கப் பிரிவினையும் சாதிப் பாகுபாடும் நீண்ட காலமாக சர்ச்சைக்குரிய ஒரு முக்கிய - மான பிரச்சனையாக அங்கு இருந்து வருகிறது எனவும் டைம் இதழ் கோடிட்டுக் காட்டியுள்ளது.

நிற, இன, வர்க்கப் பாகுபாடுகள் இன்று சட்டரீதியாக பல நாடுகளின் தேசிய அரசியல் தளத்திலும், ஐக்கிய நாடுகள் சபை போன்ற உலக அரங்குகளிலும் கூர்மையான வாதப் பிரதி வாதங்களுக்கு வழிசமைக்கத் துவங்கியுள்ளன என்பதும் வரவேற்கப்பட வேண்டியதே.

இவ்வாண்டு பெப்ரவரி 22 இல் சியாட்டில் மாநகர சபை உறுப்பினர் ஷாமா சாவந்த் அவர்களின் முயற்சியால், மாநகர சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்புக்குப் பின்பு, இனம், மதம், பாலின அடையாளம் போன்ற பிரிவுகளுடன் சாதிப்பாகுபாடும் சேர்க்கப்பட்டது. அமெரிக்க பத்திரிகைகள் பல இதனை பிரதான செய்தியாக வெளியிட்டன. 167,00க்கு மேலான தென்னாசியர்கள் வாழும் சியாட்டில் மாநகரில் இலத்திரனியல் தொழில் நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு தலித் பெண்மணியின் முறைப்பாடு இதற்கு மூலகாரணியாக அமைந்தது. பழிவாங்கலுக்குப் பயந்து தமது உண்மையான பெயரைக்கூட அவர் பகிரங்கப்படுத்தவில்லை.

மார்ச் மதம் முதல் வாரத்தில் ரொறன்ரோவிலுள்ள தொடக்கப் பள்ளி ஒன்றில் ஆறு வயதான முதல் வகுப்பு மாணவன் தனி அறையில் தடுத்து வைக்கப்பட்டமை கறுப்பு இன வெறிக்கு அடையாளம் எனக் கறுப்புக் குழந்தைகளின் பெற்றோர் தெரிவித்தனர். இனவெறி சார்ந்த பல ஆக்கிரமிப் - புகளை தனது குழந்தை அனுபவித்ததாக தாய் குற்றம் சாட்டினார்.

அமெரிக்காவிலும் கனடாவிலும் கறுப்பு இன ஆபிரிக்க மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பல்வேறு இன்னல்கள் இடையூறுகளை எதிர்கொண்டு வாழும் நிர்ப்பந்தங்களுக்கு ஆளாகின்றனர் என பல தேசிய செய்தி ஊடகங்களும், சமூகவியல் ஆய்வாளர்களும், மனித உரிமைக் குழுக்களும் கூறிவருதல் பலரும் அறிந்தது.

புலிட்சர் பரிசு பெற்ற ஆபிரிக்க அமெரிக்க எழுத்தாளர் இசபெல் வில்கர்சன் எழுதிய, “சாதி: நமது அதிருப்திகளின் தோற்றம்” என்ற புகழ்மிக்க நூல், இந்தியாவிலும் அமெரிக்காவிலும் சாதிய, நிற, இனப் பாகுபாடுகளின் தோற்றத்தையும் வரலாற்று நெறியில் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ள அற்புதமான நூலாகும். “சாதியம் என்பது எலும்பு இனம் என்பது தோல்” என அவர் கூறுவார்.

சாதி அமைப்புகளை உருவகமாய்க் கொண்டு அநீதியான அடக்குமுறைகளுக்கு அடித்தளமாக இருக்கும் எட்டு தூண்களை அவர் இனம் காட்டியுள்ளார்: அவை: 1.தெய்வ சித்தம் அல்லது இயற்கையின் விதி, 2. பரம்பரைக் களங்கம், 3. திருமணக் கட்டுப்பாடு, 4. தூய்மையும் - தீட்டுப்படல் அல்லது தீண்டாமை, 5. தொழில்சார் படிநிலை, 6. மனிதாபிமானமற்ற வடுக்கள், 7. கொடூர கட்டுப்பாடு 8. பிறப்பினால் பெறும் மேன்மை அல்லது தாழ்வுநிலை.

உலக அரங்கில் பல பதிப்புகளைக் கண்டு பல சமூகவியல் அறிஞர்களினதும், மனித உரிமை நிறுவனங்களினதும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்ற இந்த நூல் அமெரிக் - காவிலும், இந்தியாவிலும், ஜெர்மனியிலும் இன்னும் உலகின் பல பகுதிகளிலும் இலைமறை காயாக அன்றும் இன்றும் தனிமனிதர்களையும், குழுமங்கள் சமூகங்களையும் எவ்வாறு பாதித்துப் பாழாக்கியுள்ளதென்பதை பல மெய்யான கதைகள், நிகழ்வுகள், தெளிவான ஆய்வுகள் மூலமும் அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

உள்ளார்ந்த சமூகப் பிரிவினைகள் பாகுபாடுகள் சக்திவாய்ந்த தேசங்களின் தலைவிதியை கொடுமையாகப் பாதிக்கும் என்பதனை நாஜி ஜெர்மனியில் நடந்தவை, வேறு வடிவில் அமெரிக்கா, தென்ஆபிரிக்கா, ருவண்டா, இந்தியா ஆகிய நாடுகளில் எமது காலத்திலும் இடம்பெற்றன, இடம் பெறுகின்றன என ஆதாரங்களுடன் காட்டியுள்ளார்.

தனி மனிதர்களும் சமூகங்களும் நாடுகளும் முழுமையான சமத்துவம்பேணி வாழத் துவங்கும் போது உலகம் நீதியுள்ள விடுதலையை அடையும் என்பதை முடிவாக நிறுவியுள்ள இந்த நூல் எமது காலத்துக்கு மிகவும் தேவையானது. வட அமெரிக்காவின் பல உயர் பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் இந்த நூலை சமூகவியல் துறையில் பாடநூலாக கடந்த மூன்று ஆண்டு சேர்த்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.



பிறேம் சிவகுரு - இங்கிலாந்து

# புட்டின் கைது எந்தளவுக்கு சாத்தியம்?

## எல்லை கடந்த உலா

உக்ரைனியர்களுக்கு வந்தால் இரத்தம். ஆனால் அதுவே ஈழத்தமிழர்களுக்கு வந்தால் தக்காளி சட்னியா? ஏதேது மல்லினத்தனமான எள்ளலுடன் எல்லை கடந்து உலா-வரத்தலைப்படுகிறீரே என நீங்கள் விசனப்படக்கூடாது.

இந்த எள்ளலில் அறவே தார்மீகம் இருக்கிறதா இல்லையா என்பதை ICC என்ற குறியீட்டுக்குரிய International Criminal Court ஆகிய அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் நகர்வை நோக்கிவிட்டு நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

உக்ரைனிலிருந்து நூற்றுக்கணக்கான குழந்தைகளை சட்டவிரோதமாக நாடு கடத்திய குற்றத்தில் ரஸ்ய தலைவர் விளடிமிர் புட்டினுக்கும் ரஸ்யாவின் சிறார் உரிமை ஆணையா-ளருக்கும் ஐசிசி கைது ஆணை பிறப்பித்திருந்தமை இப்போது பழைய செய்தி.

ஆனால், அந்த ஆணையை மையப்படுத்திய அதிர்வுகள் இன்றுவரை தொடர்கின்றன. குறிப்பாக யாராவது புட்டினை கைது செய்ய முயன்றால் அது ரஸ்யாவுக்கு எதிரான போர்ப் பிரகடனம் என்ற மார்தட்டல்களும் நெதர்லாந்தின் ஹேக் நகரிலுள்ள ஐசிசி கட்டிடத்தையே ஹைபர்சோனிக் எனப்படும் ஒலியை விட 5 மடங்கு வேகமாக செல்லக்கூடிய ஏவுகணைகளால் நொருக்குவோம் என்ற சவால்களும் கிரெம்ளினில் இருந்து வந்துவிட்டன.

இதற்கிடையே, தமது நாடு ஐசிசியில் ஓர் அங்கத்துவ நாடு இல்லையென்பதால் நாங்கள் எப்படி அவரை கைது செய்வது? ஆகையால் ஐசிசியில் உள்ள ஐரோப்பிய பங்காளிகளே புட்டின் ஒருவேளை ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தால் அவரை கைதுசெய்யாமல் மட்டும் விட்டுவிடாதீர்கள் என அமெரிக்க ராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்கன் வேறு உசுப்பேற்றியிருக்கிறார்.

இதற்குப் பதிலடியாக ஒருவேளை ஐரோப்பிய நாடுகள் அவர் மீது கைவைக்க முயன்றால் ரஸ்யாவின் அனைத்து ஆயுதங்களும் அவற்றை குறிவைக்கும் என ஜேர்மனியை மையப்படுத்திய எச்சரிக்கைகளும் கிரெம்ளினில் வந்துவிட்டன.

ஆகமொத்தம் உக்ரைனிய போரில் தற்போது ரஸ்யாவின் கை ஓங்கியுள்ளதால் மேற்குலகு ஒரு சூட்சுமத்தை பிரயோகிப்பதால் 13 வருடங்கள் கடந்தும் ஈழத்தமிழர்களுக்கு கிட்டாத நகர்வு ஒன்று காட்சிப்படுத்தப்படுகிறது.

பொதுவாகவே உலகின் இறுதி முயற்சி நீதிமன்றம் என்ற வர்ணிப்புக்கு உரிய ஐசிசியை பொறுத்தவரை அது பிறப்பித்த கைது ஆணை குறியீட்டு ரீதியில் வரலாற்று முக்கியமானதென்-பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஏனெனில் கைது ஆணையை எதிர்நோக்கியுள்ளவர் ஐ.நா பாதுகாப்பு பேரவையில் நிரந்தர உறுப்பு நாடாக உள்ள ரஸ்யாவின் அரச தலைவர். அத்துடன் உலகை 5 முறை அழிக்கத் தேவையான நாசகார அணுவாயு-தங்களைக் கொண்ட ஒரு நாட்டின் தலைவர்.

இதனால்தான் கைது ஆணை வந்ததும் இதனை எள்ளல் செய்த ரஸ்யாவின் முன்னாள் அரச தலைவரான டிமிட்ரி மெட்வெடேவ், இந்தக் கைது ஆணையை கழிவறைக்குப் பயன்படுத்தபடும் காகி-தச் சுருளுடன் அதாவது ரொய்லெட் பேப்பருடன் ஒப்பிட்டிருந்தார்.

தொழிநுட்ப ரீதியாக ஐசிசி கைது ஆணைகளை பிறப்பித்ததாலும் அதற்கு சந்தேக நபர்களை கைது செய்யும் அதிகாரம் இல்லை. மாறாக, நீதிமன்றத்தின் உறுப்பு நாடுகள் மட்டுமே அதனைச் செய்யமுடியும். இதற்குள் இப்போது ரஸ்யா அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்பு நாடும் அல்ல. கடந்த 2016ல் புட்டினின் உத்தரவின்படி அதிலிருந்து ரஸ்யா விலகியிருந்தது. ஆகையால் தொழிநுட்ப ரீதியாக நோக்கினால் இப்போதைக்கு ரஸ்யாவுக்கு வெளியேதான் ஐசிசியின் ஏதாவது ஒரு உறுப்பு நாடு அவரைக் கைது செய்து முன்னிலைப்படுத்த வேண்டும்.

ஆனால், இதன் நடைமுறைச் சாத்தியம் குறித்து அதிகம் அலட்டிக்-கொள்ள வேண்டியதில்லை. இதனால் ஹேக் நீதிமன்ற கூண்டில் விளாடிமிர் புட்டின் தோன்றுவதை இப்போதைக்கு கற்பனையில் மட்டுமே கண்டுகொள்ள முடியும். என்றாலும் எப்போதைக்கும் இது கற்பனையாகவும் இருக்க முடியாதென்பதும் யதார்த்தம்.

ஏனென்றால், முன்னர் இவ்வாறுதான் ஹிட்லருக்குப் பின்னர் நின்ற நாஜி போர்க் குற்றவாளிகளும் தாம் அசைக்கமுடியாத பாதுப்புடன் இருப்பதாக நினைத்துக் கொண்டனர். அதேபோல, பொஸ்னியப் போரை மறைமுகமாக நடத்திய முன்னாள் யூகோஸ்லவிய அரச தலைவர் ஸ்லோபோடன் மிலோசெவிக்கும் சரி, முன்னாள் லைபீரிய தலைவர் சார்லஸ் டெய்லரும் சரி, அவர்கள் அதிகாரத்தில் இருந்தபோது தாம் அனைத்துலக கூண்டில் ஏறுவதை கற்பனை கூடசெய்ய முடியாத வகையில் சக்தி வாய்ந்த முகங்களாக இருந்தனர். ஆனால் வரலாற்றின் சுழற்சியில் அவர்கள் விசாரணைகளை எதிர்கொண்டமை வரலாறு.

இப்போது, பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட இரத்தம் தக்காளி சட்னி ஒப்பீட்டுக்கு வந்தால், இலங்கையில் 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம்பெற்ற பின்னர் நடத்தப்பட்ட இனப்படுகொலை, மற்றும் போர்க் குற்றங்களுக்காக மகிந்த மற்றும் கோத்தபாய உட்பட்ட ராஜபக்சக்களையும் கூண்டில் ஏற்றி விடவேண்டும் என எத்தனையோ மனுக்கள் அனுப்பட்டன.

2009 மே மாதம் வரை நடத்தப்பட்ட போரில் நாற்பதாயிரத்துக்கு-மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நாவே அறிக்கையிட்ட-தால் இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழர்கள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் நீதியை எதிர்பார்த்து பார்த்த கண் பூத்திருக்க, ஒருவருடம் தாண்டிய உக்ரைனியப் போரில் உக்ரைனிய சிறார்கள் ரஸ்யாவுக்கு சட்டவிரோதமாக நாடு கடத்தப்-பட்டதான குற்றச்சாட்டில் புட்டினுக்கு கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதாவது உக்ரைனில் ரஸ்யாவின் நடவடிக்கைகள் மீது குற்றச்-சாட்டுகளை முன்வைத்த வேகத்துக்கும் ஏனைய நாடுகளில் நடந்த குற்றங்களுக்காக இதே ஐசிசி நகர்ந்த வேகத்துக்கும் பெரும் வித்தியாசம் உள்ளது. இதனை ஒருவழியில் ஐசிசியின் ஓரவஞ்சனை அதிகாரத்துவம் எனவும் வர்ணிக்கலாம்.

தமிழமக்களின் இனப்படுகொலை மீதான கோப்புகளில் கண் காது வாய் பொத்தியுள்ள குரங்கு பொம்மைகள் போன்ற நிலையில் உள்ள ஐசிசி, உக்ரைனிய சிறார்கள் நாடு கடத்தப்பட்ட விடயத்தில் துள்ளியெழுந்து புட்டினை மடக்கத் தலைப்படுவது இரத்தம் தக்காளி சட்னியை நினைவூட்டுகிறதா இல்லையா?

# Anxiety Disorder

Although everybody feels some anxiety in their everyday lives, people who suffer from an anxiety disorder experience intense and prolonged feelings of fear or distress that are out of proportion to real-life events. When thinking about these real (or imaginary) events, people with anxiety often feel an amplified sense of fear or unease so powerful it can interfere with their personal and professional lives. It may even compel them to avoid certain situations or places in an attempt to avoid feeling this way. They may experience these intense feelings most of the time or in short, intense bursts that occur for seemingly no reason.

Anxiety disorders are the most common form of mental illness, affecting an estimated 10 per cent of the population,  according to Health Canada . Much like heart disease or diabetes, anxiety disorders are believed to be the product of an assortment of biological factors, brain functions and personal circumstances acting in combination with social and economic factors. Unlike heart disease and diabetes, however, anxiety disorders carry a social stigma among people who mistake them for weakness or instability. Unfortunately, this stigma can prevent people with anxiety from seeking the help they need to live normal lives.

Common anxiety disorders include panic disorder, social anxiety disorder, phobias, obsessive-compulsive disorder and generalized anxiety disorder. No matter how many disorders a person suffers from, however, properly identifying the root cause of the anxiety is the first step to successful treatment and a return to a sense of normalcy.

## What are the symptoms of anxiety?

Although symptoms can vary based on the specific form of anxiety, most disorders share some hallmark signs which include:

- Irrational and excessive fear
- Difficulty managing daily tasks or managing the distress related to these tasks
- Feeling apprehensive or tense
- An increased heart rate
- Sweating or trembling
- Breathing quickly or hyperventilating
- Difficulty sleeping
- Trouble concentrating on things other than the current source of anxiety

A sign that it's time to seek help from a medical professional is when your anxieties are beginning to take up too much of your mental energy or if they are difficult to control and interfere with your day-to-day life.

Determining the specific type of anxiety a person is experiencing is crucial to effective treatment. This usually begins with an examination by a health professional who can determine if a physical issue is the underlying cause. If there is no underlying health issue, patients may be referred to a psychiatrist who is better equipped to deal with mental health issues. A mental health professional can provide a psychological evaluation that includes a discussion about the specific thoughts, feelings and behaviours that relate to their anxiety. They will likely rely on the Diagnostic and Statistical Manual (DSM) of Mental Disorders when making a diagnosis.

## Getting treatment for anxiety

Doctors usually rely on a combination of psychotherapy and medication when addressing the underlying causes of anxiety. In addition to providing counselling, a therapist may use cognitive behaviour therapy, an extremely effective method of treatment that involves altering faulty or unhelpful thought patterns and teaching patients the skills they need to better cope with their psychological issues. It is often distortions in our own thinking patterns that contribute to anxiety and prevent us from even identifying the source of the problem.

Medications, much like therapy, are specific to the type of disorder but may include antidepressants and anti-anxiety drugs. More powerful medications may be required depending on the severity of the disorder and the impact it has on a patient's life. Other treatments, such as relaxation training, meditation and stress management, can also be helpful.

## One in 10 Canadians are affected by anxiety

It has been estimated that around one in 10 Canadians are affected by an anxiety disorder. This figure may underestimate the extent of the problem, however, particularly in light of a prolonged pandemic that has disrupted lives and exacerbated mental health around the world.

Anxiety Canada offers more information on and support for a range of anxiety - related disorders.



குயின்ரஸ் துரைசிங்கம்

# தெரிந்ததில் தெரிந்தது - 7

## வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை

**வாழ்ந்து பார்க்க வேண்டும்**
**அறிவில் மனிதனாக வேண்டும்**
**வாசல் தேடி உலகம்**
**உன்னை வாழ்த்திப் பாட வேண்டும்**

சாந்தி என்ற திரைப்படத்திற்காக 1965ல் கவியரசு கண்ணதாசன் எழுதிய இந்தப் பாடல், ஒரு மனிதன் தனது வாழ்வை நிறைவாக வாழ்ந்து, மற்றவர் பாராட்டும் வகையில் ஒரு நல்ல மனிதனாக வாழ்வை நிறைவுசெய்ய வேண்டுமென்பதைத் தெளிவாகக் கூறுகிறது.

ஒருவர் வாழும் போதும், அவர் மறைந்த பின்பும், ஒலிவாங்கியில் மட்டுமல்ல, தனிப்பட்ட உரையாடல்களில்கூட, மற்றவர் பாராட்டும் வகையில் வாழ்வது சிறப்பு என்பதையே பல அறிஞர்களும் கவிஞர்களும் பல்வேறு கருத்துகள் ஊடாக அழுத்தமாகக் கூறியிருக்கிறார்கள்.

தென்னாபிரிக்காவின் கறுப்பின அடிமைத்தனத்திற்கு எதிராக அமைதி வழியில் போராடிய டெஸ்மன்ட் ருட்டு கூறுகையில், நீங்கள் எங்கே இருந்தாலும், அங்கே உங்களால் முடிந்த சிறிய சிறிய நல்ல காரியங்களைச் செய்யுங்கள். இந்த சிறிய நல்ல காரியங்களெல்லாம் ஒன்றாகி, உலகை நன்மைகளால் நிறைக்கும் என்றார். ஒருவர் இறங்க வேண்டிய ரயில் நிலையம் எப்போது வருகிறதோ, அப்போது அவர் இறங்கித்தான் ஆக வேண்டும். தமக்கான காலம் எப்போது வரும் என்று தெரியாமல், பணத்திற்காகவும் புகழுக்காகவும் ஆலாய்ப் பறக்கும் ஒரு சிலர், பின் நோய்வாய்ப்பட்டு உதவியின்றி தனியாகத் தவிக்கும்போது, நன்மை செய்வதற்குக் கிடைத்த வாய்ப்பை - யெல்லாம் தவற விட்டமைக்காக வருந்துவது, காலம் கடந்த ஞானம் மட்டுமே.

பொது இடங்களில் சிரித்த முகத்துடன் இருப்பவர்களையும் மகிழ்ச்சியாகத் தோற்ற - மளிப்பவர்களையும் பார்த்து, இவர்கள் மட்டும் எப்படி மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள், எனக்கு மட்டும் ஏன் இப்படி என்று, எரிச்சலும் பொறாமையும் அடையும் பலரைப் பார்க்கிறோம். அந்த நபர்களுக்கும் மறுபக்கம் உண்டு, துன்பமும் துயரமும் இருக்கலாம் என்பதை சிந்திக்க மறக்கிறோம்.

வாழ்க்கை குறுகிய காலமே, அதிலும் பதினைந்து வயதிற்கு முந்திய இளமைக் காலமும், 75ஐக் கடந்த முதுமைக் காலமும், முறையே பெற்றோரிலும் வைத்தியரிலும் தங்கியிருக்கும் காலம் என்பதால், இடையிலுள்ள 50, 60 வருடங்கள் மட்டுமே, ஒரு நபர் தனது வாழ்வைத் தானே திட்டமிட்டு வாழக்கூடிய வாய்ப்புள்ள காலம். ஒருமுறை மட்டுமே வாழக் கிடைக்கின்ற இந்த அழகான வாழ்க்கையை, எமது தலைமுறைகளும் நண்பர்களும் வாழ்த்தும் வகையில் வாழ்ந்து முடிப்பது இன்றியமையாதது.

வாழ்வை நிறைவாக வாழ்ந்துவிட, ஏழு முக்கிய விடயங்களைக் கருத்திலெடுப்பது அவசியம் என்கிறது டுகைநர்யஉம என்னும் வலைப்பதிவில் அண்மையில் வெளியான உளவியல் ஆலோசனைக் குழுவின் ஆய்வறிக்கையொன்று.

* உங்களுக்கு எது முக்கியமானது என்பதை முடிவுசெய்யுங்கள். ஒருமுறை மட்டுமல்ல, தினமும், ஒவ்வொரு விடயத்தை முன்னெடுக்கும்போதும், எது முக்கியம் என்பதில் அக்கறை காட்டுவதே பிரதானமானது. உனது மகிழ்ச்சி, உனது குடும்பத்தின் மகிழ்ச்சி, உனது வாழ்வில் நன்மை பயக்கக்கூடியது என்று, நீயே முடிவெடு. அடுத்தவர் என்ன நினைப்பார்கள், அவர்களுக்கு இது சரியாகப் படுமா என்றெல்லாம் யோசித்து, உனது முடிவுகளைத் தளர்த்திக் கொள்ளாதே.

* வாழ்க்கையில் ஆபத்துகளும் விபத்துகளும் அதிகம், ஆனால் முக்கிய - மானதாகக் கருதும் விடயங்களில் கொஞ்சம் துணிச்சலாக முடிவெடுக்கத் தயங்காதே. உனக்கும் நோகாமல் அடுத்தவருக்கும் நோகாமல் ஒரு பாதுகாப்பான எல்லைக்குள் அடங்கியிருக்கும் பலரும், வாழ்க்கையை முழுமையாக வாழாமலே சென்று விடுகிறார்கள். கடந்துபோன பல வருடங்களை, முதுமைக் காலத்தில் யோசித்துக் கவலையடைவதில் பயன் எதுவும் இல்லை.

* நீ நேசிக்கும் அனைவருக்கும் உனது அன்பை வெளிப்படையாகக் காட்டவும் சொல்லவும் தயங்காதே. குடும்ப உறவுகளும், நண்பர்களும், உங்களது அன்பின் ஆழ அகலங்களை உங்களது வாயிலிருந்து கேட்பதற்கு மிகவும் விரும்புவார்கள். செயலில் காட்டுவதற்கு வாய்ப்பு வருமா என்பது சந்தேகமே. அதனால், உங்கள் அன்பையும் பாசத்தையும் நேசத்தையும் மட்டுமல்ல, நன்றியையும் அவர்களிடம் கூறிவிடுங்கள்.

* நிகழ்காலத்தில் வாழ்வதற்குப் பழகிக்கொள்ளுங்கள். கடந்துபோனவை மீளவும் வராது, எதிர்காலம் வருமா என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. வாழ்க்கை ஒருமுறை மட்டுமே. அதனால் ஒவ்வொரு நாளையும் நிறைவாக வாழ்ந்துவிட முயற்சியுங்கள்.

* உங்கள் வாழ்க்கையை எத்தனை நேர்த்தியாக வாழ முயற்சித்தாலும், குறை கண்டுபிடிப்பதற்கு எப்போதும் நாலு பேர் உலகில் இருப்பார்கள். அவர்களை உங்கள் வாழ்விலிருந்து தவிர்த்து விடுங்கள். உங்கள் தோல்விகளில் அதிக கவனம் செலுத்தும் எதிரிகளோடு அதிக நேரத்தை விரயம் செய்யாமல், உங்கள் உயர்விற்கும் மகிழ்விற்கும் அந்த நேரத்தைப் பயன்படுத்துங்கள்.

* நேர்மையையும் நாணயத்தையும் எதற்காகவும் விட்டுக் கொடுக்காதீர்கள். நீதிநெறிகளும் அறமும் நிறைந்த வாழ்க்கை அவசியம். உங்கள் மனஉணர்வில் தவறானது என்று தோன்றும் எதையும் செய்யாதீர்கள்.

* அடுத்தவர்களிடம் அன்பும் கருணையும் காட்டுங்கள். பணமும் பொருளும் கொடுப்பதே அன்பின் வெளிப்பாடு என்று நினைக்காமல், ஒரு புன்னகை, சில நல்ல வார்த்தைகள், மனம்திறந்த பாராட்டு என்று உங்கள் பேச்சிலும் கருத்திலும் அன்பையும் கருணையையும் மனநிறைவுடன் வழங்குங்கள்.

எங்கள் எல்லோருக்கும் தெரிந்தவற்றில், நான் உங்களோடு பகிர்ந்துகொள்ளத் தெரிந்தெடுத்த விடயம் இது. இணைந்து முயற்சிக்கலாம்.



கனகேஸ்வரி நடராஜா

# முடிவை நோக்கி நகரும் புத்தக அலுமாரிகள்

அண்மையில் யூ-ரியூபில் பிரபல பேச்சாளரும் மருத்துவருமாகிய டாக்டர் சுதா சேஷையாவின் உரையை கேட்க முடிந்தது. புத்தக விழா ஒன்றில் இந்த உரை இடம்பெற்றது. கண்காட்சியை பார்வையிட்டுக் கொண்டு வரும்போது இருவருடைய உரையாடலை தாம் கேட்க நேர்ந்ததாக மிகவும் வருத்தத்துடன் கூறினார்.

ஒரு மகள் புத்தகமொன்றை கையிலெடுத்துக் கொண்டு அதனை வாங்கித் தருமாறு தாயாரிடம் கேட்க, அதற்கு அந்தத் தாயார் “எல்லாத்தையும் வாங்கினால் வைக்க இடமிருக்காது” என்று கூறி அந்தப் பிள்ளையின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்விட்டாராம். இன்று பலர் மத்தியில் ஏற்பட்டிருக்கும் புதிய பிரச்சனையை மிகவும் ஆதங்கத்துடன் சுதா சேஷையா பகிர்ந்து கொண்டார்.

இன்று மின்னூல்களும் நவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளின் காரணமாக நூல்களை வாசிப்பதற்கு பலவித வழிமுறைகளும் ஏற்பட்டதன் பின்னர் அநேகமானோர் புத்தகங்களை வாங்க தயங்குகிறார்கள். மலையளவில் புத்தகங்களை கண்ணாடி அலுமாரிகளிலும், தட்டுகளிலும் அடுக்கி வைத்து பிறர் எம்மை மெச்சவும், நாமும் பெருமையடைய வாழ்ந்த வாழ்க்கை முறை இன்று முடிவை நோக்கி நகர்ந்து கொண்டி - ருக்கிறது. எனது சமவயதினர் பலர் தாம் வாழ்ந்த வசதியான வீடுகளை விட்டு முதியோர் இல்லங்களுக்கும் பராமரிப்பு இல்லங்களுக்கும் குடியேறத் தொடங்கியுள் - ளனர். இதுவரை காலமும் தாம் பாதுகாத்து பயன்படுத்திய பல பொருட்களை பிறருக்குக் கொடுக்கவோ, அல்லது மீள்சுழற்சிப் பெட்டியில் போடவோ அல்லது மாநகர-சபைக்கு சொந்தமான குப்பை மேடுகளுக்கோ அனுப்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இவர்கள் பல வருடங்களாக சேமித்து வைத்திருந்த புத்தகங்கள் இச்சந்தர்ப்பத்தில் பெரிய பாரமாக இவர்களுக்கு மாறுகிறது. எனக்குத் தெரிந்த ஒருவர் ஒவ்வொரு வருடமும் இந்தியா சென்று வரும்போது கட்டுக்கட்டாக புத்தகங்களை - கூடுதலாக சமயப் புத்தகங்களை வாங்கி வருவார். இப்போது முதியோர் பராமரிப்பு நிலையத் - துக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. தொலைபேசியில் தனக்குத் தெரிந்த பலரை அவர் தொடர்பு கொண்டு அவர்களுக்கு விரும்பிய புத்தகங்களை எடுத்துக் கொண்டு போகுமாறு கேட்டபோது ஒருவருமே தங்களுக்குத் தருமாறு கூற - வில்லையாம். ஒரு சிலர் மாத்திரம் இரவலாக சில புத்தகங்களை தருமாறு கேட்டனர். இதனால் ஆசையாக வாங்கிய புத்தகங்களை மீள்சுழற்சிப் பெட்டியில் போட மனம் வரவில்லையாயினும் வேறு வழியின்றி மனதைக் கல்லாக்கிக் கொண்டு அவற்றை மீள்சுழற்சிப் பெட்டியில் போட்டதாகக் கூறினார். இந்த நிலைதான் வருங்காலத்தில் பலருக்கு ஏற்படப் போகிறது.

தாய்நாட்டில் பல வீடுகளில் அவர்களின் முன்னைய சந்ததியினர் விட்டுப்போன புத்தக அலுமாரிகள் பழுப்பேறிய புத்தகங்களை சுமந்தவாறு வீட்டின் ஒரு பகுதியில் காணப்படும். அவற்றை பெரிதாக எவரும் வாசிக்காவிட்டாலும் அதனை ஒரு சுமையாகவோ இடவசதிக்கு இடைஞ்சலாகவோ எவரும் எண்ணவில்லை. ஆனால் இன்று உபயோகப்படுத்தாமல் இருக்கும் புத்தகங்களை வைத்து எதற்காக வீட்டில் இடநெருக்கடியை ஏற்படுத்த வேண்டுமென்ற மனநிலையே பலரிடமும் காணப்படுகிறது.

இப்படிக் கூறுவதால் புத்தக வாசிப்பு அற்றுப்போய்விட்டது என்று அர்த்தமில்லை. கணிசமானவர்கள் புத்தகங்களை பணம் கொடுத்து வாங்கி வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகையின் வார இறுதி வெளியீட்டில் அண்மையில் வெளியான புத்தகங்களின் பட்டியலும், விற்பனையில் முன்னணியில் நிற்கும் புத்தகங்களின் விபரங்களும் பிரசுரமாவது வழக்கம். அதனை பார்க்கும்போது புத்தக பிரியர்களின் எண்ணிக்கை குறையவில்லை என்பது தெரிய வருகிறது. புத்தகங்களை கவனமாக ஆண்டாண்டு காலமாக பேணிப்பாதுகாக்கும் மனநிலை குறைந்து வருவதையே நான் இங்கு குறிப்பிடுகிறேன்.


முன்னையவர்கள் பலரிடம் வகைவகையான அகராதிகள் இருந்தன. என்னிடம் தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ், ஆங்கிலம் - ஆங்கிலம் அகராதிகள் உண்டு. பல ஆண்டுகளாக நான் பாவித்து பத்திரமாக வைத்திருக்கும் அவை மிகவும் கனதியானவை. அதில் ஒன்றைக்கூட எனது பிள்ளைகளோ பேரப்பிள்ளை-களோ நிச்சயம் பயன்படுத்த மாட்டார்கள். தேவையான விளக்கங்களை ஒரு விரலசைவில் கணினிகளில் அவர்களால் பெறமுடியும். எதற்காக கனதியான அகராதிகளை கையிலெடுத்து பக்கம் பக்கமாக அவர்கள் புரட்ட வேண்டும். பலவகையான தமிழ் நூல்களை ஆசை ஆசையாக சேகரித்து வைத்திருந்தோம். எமது அடுத்தடுத்த தலைமுறையினருக்கு இவற்றை ரசித்து வாசிப்பதற்கு வேண்டிய தமிழறிவு இல்லை. அத்துடன் அவர்களின் ரசனை, தொழில்நுட்ப முன்னேற்றம், வாழ்க்கை முறை வேறுபட்டதாக உள்ளது. இலக்கியப் புத்தகங்களை இவர்கள் வாசிக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதும் தவறு.

‘குழந்தைகளைச் சுற்றி புத்தகங்களைப் போட்டு வையுங்கள். அவர்கள் அவற்றைக் கிழிக்கலாம், படங்களை மாத்திரம் பார்க்கலாம், பக்கங்களை சும்மா புரட்டலாம், புத்தகங்களை தொட்டுப் பார்ப்பதன் அவர்களின் மூளையில் ஒருவிதமான புத்துணர்ச்சி (sensation) ஏற்படும்’ என்று குழந்தை மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஒருசில வருடங்களுக்கு முன்புகூட குழந்தைகள் புத்தகங்களோடுதான் வாழ்ந்தார்கள். சின்னஞ்சிறு குழந்தைகளின் கைகளில்கூட ஸ்மார்ட் தொலைபேசிகள். அதனோடு விளையாடியவாறு இருக்கிறார்கள்.

புத்தகங்களைத் தொட்டு பக்கங்களை புரட்டி வாசிப்பதில் தனிச்சுகம் உண்டு. அவைகளை கையில் வைத்திருந்தவாறு சிலசமயம் கனவு உலகத்தில் சஞ்சரிக்கச் சென்றுவிடுவோம். அதில் வரும் கதாபாத்திரங்களோடு எங்கள் உள்ளமும் சிந்தனையும் உலாவச் சென்றுவிடும். இதனால் புத்தகங்கள் மேல் எமக்கு பாசமும் பற்றும் ஏற்படுவதுண்டு. மின்னூல்களை வாசிக்கும்போது இத்தகைய உணர்ச்சிகள் எமக்கு ஏற்படுவதில்லையே.

புத்தகப் பிரியர்களாகிய நாம் எங்களுக்குப் பின்னர் சேகரித்த புத்தகங்களுக்கு என்ன ஆகுமோ என்ற கவலையை விட்டு தொடர்ந்தும் புத்தகங்களை வாங்கி வாசித்து ஆத்ம திருப்தி அடைவோம்.

புத்தகங்களை வாசிப்போம், நேசிப்போம், சுவாசிப்போம்.



இரா. சம்பந்தன்

# உள்ளம் இரண்டும் ஒன்று!

அது சங்கம் முடிந்து தோன்றிய அறநெறிக் காலம். அந்தக் காலத்திலே ஒருநாள் காட்டு வழிப்பாதை ஒன்றில் மக்கள் கூட்டம் கூட்டமாக நடந்து கொண்டிருந்தார்கள். காட்டு விலங்குகளை விரட்ட அவர்கள் பாடிக்கொண்டும் பேசிக்கொண்டும் பறை போன்ற வாத்தியங்களை ஒலித்துக்கொண்டும் நடந்தார்கள்.

அந்தக் கூட்டத்துள் ஔவையும் இருந்தாள். அவளுடன் உலக விடயங்களைப் பேசிக்கொண்டு ஒரு முதிய வைத்தியனும் வந்தான். அவன் பாம்பு போன்ற விட ஜந்துக்கள் தீண்டிய மக்களுக்கு வைத்தியம் செய்யும் விடகடி வைத்தியன். அவனும் ஔவையும் ஒரு விலங்கின் வினோத துன்பக் குரலை தூரத்தே கேட்டார்கள்.

அது புலியின் குரல். கவனமாக நடவுங்கள் என்று எச்சரித்தார் - கள் கூடவந்த காட்டு வாசிகள். புலி ஊறுமும் அல்லவா இது என்ன துன்ப மயமான சத்தம் என்று கேட்டாள் ஔவை. உண்மைதான். ஆனால் அந்தப் புலி ஏதோ நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் இருக்கின்றது. பலநாட்கள் வேட்டையாடவும் செல்லாமல் ஒரு இடத்திலேயே இருக்கின்றது போலும் அது தான் இந்த அவலக் குரல் என்று தன் அனுபத்தைச் சொன்னான் வைத்தியன்.

எந்த உயிரும் எடுத்துக் கொண்ட தேகத்துக்கான கடமை-களைத்தான் செய்கின்றது. அது பொல்லாதது என்று எண்ணி அந்தப் புலியைக் கடந்து போக எனக்கு மனம் வரவில்லை. என்ன ஏதென்று பார்ப்போமா என்று கேட்டாள் ஔவை.

நல்லது தாயே வா என்று அவளையும் அழைத்துக் கொண்டு சத்தம் வந்து கொண்டிருந்த ஒரு புதர் அருகே சென்றான் வைத்தியன். பசியால் மெலிந்து நடக்க முடியாமல் ஒரு புலி கிடப்பதை அவர்கள் கண்டார்கள். ஔவை தூரத்தே நின்று கொண்டாள். வைத்தியன் மெதுவாக அருகே போனான்.

அந்தப் புலியின் முன் கால் ஒன்றில் ஏதோ விச முள்ளுக் குற்றி கால் வீங்கியிருந்தது. வைத்தியன் அதன் அருகே சென்று பரிவோடு அதன் தலையைத் தடவினான். அதன் அருகே அமர்ந்து அதன் முள் தைத்த காலை மெதுவாகத் தூக்கித் தன் மடிமீது வைத்துக் கொண்டு தன் துணி மூட்டையில் இருந்த ஒரு கூரிய ஆயத்தால் அதன் காலில் தைத்திருந்த முள்ளை மெதுவாக எடுத்தான். உதிரத்தைத் துடைத்து தன்னிடம் இருந்த விடம் போக்கும் மருந்தை எடுத்து அதன் காலிலே தடவினான்.

அப்போது எழுந்து நின்ற புலி தன் கால்களால் அந்த வைத்தியனை அடித்து வீழ்த்திக் குரல்வளையைக் கடித்தது. இந்தக் காட்சியைக் கண்டு ஐயோ என்று பதறினாள் ஔவை. காட்டு வாசிகள் ஓடி வந்தார்கள். அதற்குள் புலி வைத்தியனை இழுத்துக் கொண்டு புதருக்குள் ஓடி மறைந்துவிட்டது. தேடிப் போனவர்கள் திரும்பி வந்து வைத்தியர் கிடைக்கவில்லை என்றார்கள்.

தவித்தாள் ஔவை. மனிதர்களே மனிதர்களே வேங்கைக்கு இரக்கப்பட்டு உதவி செய்து ஒரு மனிதனின் உயிர் போய்விட்டது. பண்பாடு தெரியாத புல்லிய அறிவினருக்கு உதவி செய்யப் போகாதீர்கள். அப்படிச் செய்தால் உங்கள் வாழ்வு கல்லிலே போட்ட மண் பானை போல அந்தக் கணமே அழிந்து போகும் என்று உரக்கக் கத்திவிட்டு சோகமாக நடந்தாள் ஔவை. நடக்கும் போதே அவள் கைகள் ஏட்டையும் எழுத்தாணியையும் எடுத்துக் கொள்கின்றன.

வாக்குண்டாம் என்ற மூதுரையில் பதினைந்தாவது பாடல் பிறக்கின்றது.

> வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
> ஆங்கதனுக் காகார மானாற்போல் - பாங்கறியாப்
> புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரங்
> கல்லின்மே லிட்ட கலம்.

காட்டுப் பயணம் முடிந்து ஊருக்குள் வந்ததும் வள்ளுவனிடம் வந்தாள் ஔவை. தன் மனவேதனையைக் கொட்டித் தீர்த்தாள். வள்ளுவன் கேட்டான். ஔவையே நீ அடைந்த அனுபவத்தை எடுத்து நானும் ஒரு குறள் ஆக்கிக் கொள்ளட்டுமா

சம்பவம் பெரியது. உன் குறளோ ஈரடிக்குள் அடங்கியது எப்படியப்பா உன்னாலே பாட முடியும் என்றாள் ஔவை.

ஒருவர் நல்லவரா கெட்டவரா என்று சரியாகத் தெரிந்து கொள்ளாமல் உதவி செய்யப் போவதிலும் ஒரு குற்றம் இருக்கின்றது. அது தானே நீ அடைந்த அனுபவமும் கவலையும். நான் பாடிக் கொள்கின்றேன் விடு.

**நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்**
**பண்பறிந்து ஆற்றாக் கடை**

( திருக்குறள் அதிகாரம் -
தெரிந்து செயல்வகை குறள் எண் - 469 )

இங்கே அறநெறியை உணர்த்த வந்த இரு தமிழ்ப் புலவர்களைக் காண்கின்றோம். ஒருவர் பெண் மற்றவர் ஆண். ஔவையை எடுத்துக் கொண்டால் அவள் பாடல்கள் ஒரு தாயின் வார்த்தைகளாக மக்களை அரவணைத்துச் செல்வதைக் காணலாம். அவளின் எந்தக் கருத்தும் கோபம் கலவாமல் அன்பில் தோய்ந்த ஒரு தன்மையோடு காணப்படும்.

வள்ளுவன் குறளிலே கண்டிப்புத் தன்மை இருக்கும். கோபம் காணப்படும். இதைச் செய்தால் நீ நல்லவன். இந்தத் தவறு செய்தால் நீ கெட்டவன் என்று தரம் பிரிக்கும் அளவீட்டுத் தன்மை இருக்கும். யாருக்கும் அவன் அஞ்சியது கிடையாது.

ஔவையும் வள்ளுவரும் தங்கள் இலக்கியங்களுக்கு கையாண்ட மொழிநடை வேறுபட்டாலும் இருவர் உள்ளங்களும் ஒன்றாகத்தான் இருக்கின்றன. அதனால் அவர்களின் பல பாடல்கள் ஒரே கருத்தை வலியுறுத்தி நிற்கின்றன.



பொன்னையா விவேகானந்தன்

## மரபும் மாண்பும் 35

# தமிழர் பண்பாட்டில் வளையல்

கைகளில் வளையல் அணிதல் தமிழர்கள் தொன்றுதொட்டு பின்பற்றிவரும் பண்பாட்டு நடத்தையாகும். வளையமாக இருப்பதால் இதற்கு வளையல் என்று பெயர். இதனை ஈழத்தவர்கள் காப்பு என அழைப்பர். இதுவும் காரணப் பெயரே. வழிபாட்டுக்குப் பின்னர் இறைவர் காப்பர் என்ற நம்பிக்கையில் கைகளில் கட்டப்படும் நூல்களைக் 'காப்புக்கயிறு' என்பர். இதன்வழியே பிறந்ததுதான் காப்பு என்ற சொல்.

தொன்மைத் தமிழர் வளையலைத் வளை, தொடி என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். தொன்தமிழ் இலக்கியங்கள் வளையல்களைச் பலவாறாகச் சிறப்பித்துக் கூறியிருக்கின்றன. அக்காலத்தில் தமிழ்நாட்டில் சங்கை அறுத்துச் செய்யப்பட்ட வேலைப்பாடுகளைக் கொண்ட வளையல்கள் சிறப்புற்றிருந்திருக்கின்றன. வலம்புரிச்சங்கு வளை-யல் பெறுமதி மிக்கதாகக் கருதப்பட்டுள்ளது.

மதுரைக்காஞ்சி, மணிமேகலை, நற்றிணை, பரிபாடல், கலித்தொகை, புறநானூறு, அகநா - னூறு, நெடுநல்வாடை போன்ற இலக்கியங்கள் யாவற்றிலும் சங்கு வளையல்கள் பற்றிய குறிப்புகள் நிறையவே காணப்படுகின்றன.

பாண்டியன் நெடுஞ்செழியனுடைய மனைவியாகிய பாண்டிமாதேவி தனது கைகளில் தங்க வளையல்-கள் அணியிருந்ததோடு, வலம்புரி சங்குவளை - யலையும் அணிந்திருந்தார் என்பதை 'பொலற்கொடி தின்ற மயிர்வார் முன்கை - வலம்புரி வளையோடு கடிகை நூல் யாத்து' என நெடுநல்வாடை என்ற இலக்கியம் குறிப்பிடுகிறது.

சிலப்பதிகாரத்தில் கடலாடு காதையில் பெண்கள் அணிந்திருந்த பல்வகை வளையல்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன. வயல்களிலே வேளாண்மைப் பணிகளில் ஈடுபட்டிருந்த பெண்கள், ஆம்பல், குவளை, ஆம்பல் போன்ற நீர்ப்பூக்களின் தண்டுகளை வளைத்து வளையல் - களாக்கி அணிந்திருந்தனர் என புறநானூறு என்ற இலக்கியம் கூறுகின்றது. காவிரிபூம் பட்டனத்தில் சங்கை அறுத்து வளையல் விற்பதற்கென ஒரு தெருவே இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

தமிழர்கள் வடித்தெடுத்த முற்காலச் சிற்பங்களி - லும் கோவில்களிலே காணப்படும் திருவுருவச் சிலைகளிலும் பல்வகை வளையல்கள் செதுக்கப் - பட்டிருப்பதைக் காணலாம். அக்காலத்தில் கடகவளை, செம்புவளை, கைவளை, நவமணி - வளை, சற்குவளை, பவழவளை என ஐவகை வளையல்கள் இருந்திருக்கின்றன. இராசராசசோழன் காலத்து கல்வெட்டுகளும் வளையல்கள் பற்றிக் கூறுகின்றன.

தமிழ்நாட்டில் அகழ்வாய்வுகள் நடைபெற்றபோது, பல்வனை வளையல்கள் கண்டெடுக்கப்பட்டுள் - ளன. கொற்கை, அழகன் குளம், கொடுமணல், உறையூர், காவிரிப்பூம்பட்டினம், கீழடி, திருக்கோவிலூர், காஞ்சிபுரம் போன்ற வரலாற்று சிறப்புமிக்க இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் சங்கு வளை - யல்கள் கிடைத்துள்ளன. சங்குகளை அறுத்து வளையல்கள் செய்தமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.

பிற்காலத்தில் கண்ணாடி, இறப்பர், நெகழி வளையல்கள் தோற்றம் கொண்டு தமிழ் மகளிர் கைகளை அழகுபடுத்தியிருக்கின்றன.

பெண்கள் கைகளில் வளையல் அணியும் மரபு வெறுமனே அழகுக்காக மட்டுமே பின்பற்றப்பட்டதல்ல. இதனுள் அறிவியல் சார்ந்த நன்மைகளும் அடங்கியுள்ளன.

**வளைகாப்பு**

இதன் பொருள் வளையல்கள் அணிவதனால் ஏற்படும் காப்பு என்பதாகும். இந்தச்சடங்கு தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது.

பெரும்பாலும் முதல்முறையாக கருவுற்ற பெண்களுக்கு, பெற்றோர், உறவினர், நண்பர்கள் கூடி ஏழு அல்லது எட்டாவது மாதத்தில் வளையல்களை அணிவித்து மகிழ்வதே வளைகாப்பு. மேற்குலத்தோர் கொண்டாடும் பேபி ஷவர் (baby shower) என்ற நிகழ்வுக்கு ஒப்பாக இது கருதப்படுகின்றது.

கருவுற்ற பெண்ணை அழகுபடுத்தி, ஓர் இருக்கையில் இருத்தி வைத்துப் பலரும் கண்ணாடி வளையல்களை அணிவிப்பர். வளையல்களை மணிக்கட்டு முதல் முழங்கைவரை அணிவிப்பர். பின் ஆரத்தி எடுத்து, மலர், அரிசி தூவி வாழ்த்துவர். பின் எல்லோரும் கூடி, ஆடிப்பாடி பெண்ணை மகிழ்விப்பர். இந்த வளைகாப்பு என்ற நிகழ்வுக்குப் பின்னால் பண்பாடு தொடர்பான காரணங்கள் உள்ளன.

மகவைப் பெற்றெடுத்தல், குறிப்பாக முதல் மகவைப் பெறுதல் பெண்களுக்குப் பயத்தை ஏற்படுத்தும். மகப்பேறு நலமாக நடைபெற வேண்டுமே என்ற கவலையும் இருக்கும். இதைக் கருத்திற் கொண்டு பெற்றோரும் உறவினரும் நட்புகளும் கூடி நின்று, உனக்கு ஒரு துன்பமும் நேராது, உன்னைப் பாதுகாப்பாக நாங்கள் இருக்கின்றோம் என்று நம்பிக்கையூட்டும் நிகழ்வே வளைகாப்பு. இந்த வளையல் - களைப் பார்க்கும்தோதெல்லாம் பெண் நிறைந்த நம்பிக்கையுணர்வோடும் மகிழ்வோடும் இருப்பாள். அதுவே அவளுக்கும் குழந்தைக்கும் நலம் தருவதாக அமையும். அதுமட்டுமன்றி, கண்ணாடிக் காப்புகள் எழுப்பும் இனிய ஓசை, கருவறைக்குள் இருந்தபடி ஒலிகளைக் கேட்கும் வல்லமைபெற்ற குழந்தைக்கும் இனிமையாக இருக்கும்.

இக்காலத்தில் பலவும் பல்வகை உலோகங்களினாலான வளையல்களை அணிகின்றனர். செப்பு வளையல்கள் இரத்த ஓட்டத்தைக் சீராக்கும் எனக் கருதி ஆண்களும் அதை அணிகின்றனர். வளையல்கள் அணிதல் தொன்றுதொட்டே தமிழர்கள் பின்பற்றிவரும் பண்பாடாகும். இது தமிழர்கள் மட்டுமன்றி, இந்தியாவில் வாழும் பல்வகை இனத்தோருக்கும் உரிய பண்பாடாகவே உருக்கொண்டிருக் - கின்றது. எனினும் தமிழர்களே வளையல்களைப் பண்பாட்டிலும் ஆன்மீகத்திலும் ஆழமான அடையாளமாகக் கொண்டுள்ளனர்.

இக்காலத்திலும் செல்வாக்குக் குறையாத அணிகலனாக வளையல் திகழ்கின்றது. சிறுமியர் முதல் மூதாட்டிகள் வரை அழகழகாக வளையல்கள் அணிகின்றனர். பலவினத்தோர் கூடும் நிகழ்வுகளில் பண்பாட்டு உடையுடன் வரும் தமிழ்ப் - பெண்கள் வளையல்கள் அணிந்தபடி அழகாகக் காட்சி தருவதை புலம்பெயர் நாடுகளில் காணலாம்.

தமிழர்கள் காலாகாலத்துக்கும் பின்பற்றிச் செல்லவேண்டிய பண்பாட்டு நடத்தைகளுள் வளையல் அணிதலும் ஒன்றாகும்.

கனடா மூர்த்தி



# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன்

“கண்டதைச் சொல்லுகிறேன்” என்ற தலைப்பில் ஒரு கட்டுரைத் தொடரை இதே “தமிழர் தகவல்” சஞ்சிகையில் மொத்தம் 62 இதழ்களில் தொடர்ச்சியாக எழுதியிருந்தேன். முகப்புத்தகம் நமது தமிழ் மக்களிடையே பெருவேகமெடுக்க ஆரம்பித்த காலப்பகுதியில் - பத்து வருடங்களுக்கு முன்னர் - 2013 மார்ச் மாதம் அத்தொடர் ஆரம்பிக்கப்பட்டது. முகப்புத்தகப் பதிவுகளைத் தேரந்தெடுத்து அவற்றிலிருக்கும் உள்ளார்ந்த சமூக அரசியலைத் தொட்டு நான் கண்டதைப் பகிர்வதுதான் அக் “கண்டதைச் சொல்லுகிறேன்” தொடர் என்பது “தகவல்” வாசகர்களான உங்களுக்குத் தெரியும்.


இங்ஙனம் மற்றவர்களின் முகப்புத்தகப் பதிவுகளை வைத்து அத்தொடரை நான் எழுதியபோது பின்னொருகாலத்தில் நான் எழுதிய முகப்புத்தகப் பதிவு ஒன்று மற்றவர்களால் ரசிக்கப்பட்டு, அப் பதிவிலிருக்கும் சமூக அரசியல் பேசுபொருளாகி, வைரலாகிக் கொள்ளும் என நான் நினைத்திருக்கவில்லை. ஆனால் அது நடந்தது. அப்படியென்னதான் அந்தப் பதிவிலிருந்தது எனக் கேட்கிறீர்களா? சொல்கிறேன்:

இந்த 2023 ஆண்டு பெப்ரவரி மாதம் சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு முதன் முறையாக விமான மூலம் வந்து இறங்கினேன். பயணிகள் விமானங்களில் எத்தனையோ முறை பயணித்தாயிற்று. ஆனால் இந்தப் பயணத்தில் தரையிறங்குகையில் நான் அடைந்த உணர்வு அசாதாரணமானது. ஆத்மார்த்தமானது. அதனால் இப் பயணத்தில் நான் கண்டதைச் சொல்லி அதை என் முகப்புத்தகத்தில் பகிர்ந்திருந்தேன். என்ன மாயமோ தெரியவில்லை அந்த சிறு பதிவு எதிர்பார்க்காத அளவிற்கு பல்லாயிரக் கணக்கில் பலராலும் படிக்கப்படுவதும், மீளப் பகிரப்படுவதுமாக மாறிக் கொண்டது.

போதாததற்கு அப்பதிவு இலங்கையிலும், இந்தியாவிலுமுள்ள பல வேறு வாட்ஸ்அப் குழுக்களிடையே பகிரப்படுவதாகவும் மாறியது. இலங்கையில் பல வாட்ஸ்அப் குழுக்களும், இந்தியாவில் குறிப்பாக பி.ஜே.பி. ஆதரவாளர்களின் வாட்ஸ்அப் குழுக்களும் இந்தப் பதிவை மீண்டும் மீண்டும் பகிர்ந்து அவர்களது அரசியல் பேசுபொருளாக வைத்திருந்தார்கள். இலங்கையின் சில சஞ்சிகைகள் அந்தப் பதிவை மீள் பிரசுரம்




செய்திருந்தன. பதிவில் நான் எழுதியவற்றை தொலைக்காட்சிக்கான ஸ்க்ரிப்ட்டாக்கி - நான் பகிர்ந்த படங்களுடன் - தொலைக்காட்சி நிகழ்ச்சியாகவும், தனிப்பட்டவர்களின் யூ-ட்யூப் சனல் நிகழ்ச்சியாகவுங்கூட அது ஒளிபரப்பப்பட்டிருந்தது. யாழ்ப்பாண வீதிகளில் பலரும் என்னை அடையாளம் கண்டு “உங்கள் பதிவு நன்றாக இருந்தது” என்றார்கள் - எனது யாழ்ப்பாண பயணம் இனிமையாகட்டும் என வாழ்த்தினார்கள். ஒரு சாதா முகப்புத்தகப் பதிவுக்கு இப்படி ஒரு வரவேற்பா? நடுங்கிப்போனேன். சுருங்கச் சொன்னால் அவையெல்லாம் எனக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது என்பதுதான் உண்மை.






உண்மையில் எனது முகப்புத்தகத்தில் எழுதப்பட்ட அப்பதிவு மிகவும் எளிமையானது. அஃது யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தைக் குறித்து நேர்மறையாக எழுதப்பட்ட ஒரு பயண அனுபவப் பகிர்வு மட்டுமேயாகும். இந்த யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் 1980களுக்கு முன்பு பலாலி விமான நிலையமாக உள்ளூர் மற்றும் இந்திய நகரங்களை இணைத்துக் கொண்டிருந்ததை நாம் அறிவோம். பின்னர் ஈழப்போர் நடந்த காலகட்டத்தில் சிறீலங்கா படையின் விமானத்தளமாக அது மாறி ஈழத்தின் மக்களை கதி கலங்க வைத்துக் கொண்டிருந்தது. போர் நின்றபின்னர் இன்று இந்த விமான நிலையத்தின்மீது இந்தியாவின் கவனம் குவிக்கப்படுவதன் விளைவே சென்னை - யாழ்ப்பாண விமானசேவை! அச் சேவையால் கிட்டிய பயணம் குறித்ததே என் முகப்புத்தகப் பதிவு.




இருபுறமும் இறக்கையில் விசிறிகள் கொண்ட ஒரு சிறிய விமானமே சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பறப்பில் தற்போது ஈடுபடுகிறது. 72 பயணிகளுக்கு மட்டுமே இருக்கைகள் அதிலிருக்கின்றன. நான் பறந்த விமானத்துள் ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் தமிழிலும் அறிவிப்புக்கள் செய்யப்பட்டன. (சிங்களம் மிஸ்ஸிங்.) தமிழ் அறிவிப்பைக்கூட “ஜெய் ஹிந்த்” என்று சொல்லித்தான் முடித்தார்கள்.

அன்று விமானத்துள் அமர்ந்திருந்த பயணிகளில் வெள்ளையர்கள் யாரும் இருக்கவில்லை. புலம்பெயர் வெளிநாட்டு ஈழத்தமிழர் நான்கு ஐந்து பேர் இருந்தோம். தவிர மற்ற அனைவரும் ஈழத்தில் வாழும் தமிழர்கள். எளிய மனிதர்கள். புலம்பெயர் ஆர்ப்பாட்ட நடை உடை பாவனைகள் அலப்பறைகள் அறவே அற்ற சாதாரணர்கள். பயணத்தின்போதும், விமானம் தரையிறங்கியதும் அவர்களில் பலரும் உரத்த குரலில் வெள்ளந்தியாகப் பேசிக் குதூகலித்தார்கள். என் அருகே அமர்ந்திருந்த ஒரு சிறுவன் பயணத்தின் ஒவ்வொரு மணித்துளியையும் அனுபவித்து மகிழ்ந்து கொண்டிருந்தான். இவற்றையெல்லாம் என் பதிவில் சொல்லியிருந்தேன். குதூகலம் கொப்பளிக்க சுமார் ஒன்றேகால் மணி நேரத்தில் சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்தை அடைந்துவிட்டோம். காலை உணவு சென்னையில். மதிய உணவு யாழ்ப்பாணத்தில். இது எப்படி இருக்கு?

( 30ம் பக்கம் வருக )



அ. முத்துலிங்கம்

# மூன்று அநாதைகள்

பல வருடங்களுக்கு முன்னர் நியூயோர்க் நகரில் நடந்த விழாவில் Jose Andres என்பவரின் உரையை கேட்டேன். அதிஉன்னதமான சமையல் கலைஞர் அவர். உலகின் எந்தப் பகுதியில் பேரிடர் நேரும்போதும் அங்கே உணவு வழங்க முதல் ஆளாக நிற்பார். உணவு பக்கெட்டுகளை ஹெலிகொப்டரில் இருந்து கீழே வீசுவதல்ல. அவர் வேலை, உணவை சமைத்து வழங்குவது. அவர் சேவையை பாராட்டி வெள்ளைமாளிகை விருது அளித்திருக்கிறது.

உலகத்தின் உயர்ந்த 100 சாதனை மனிதர்களில் ஒருவராக அவரை டைம் இதழ் பாராட்டியிருக்கிறது. அவருடைய பேச்சு இன்னும் மனதில் நிற்கிறது. அவர் மேடையில் ஐந்து நிமிடம் மட்டுமே பேசினார். பசிக்கு மொழி இல்லை. இனம் இல்லை. சாதி இல்லை. நிறம் இல்லை. எங்கே ஒருவருக்கு பசிக்கிறதோ அதை தீர்க்க வேண்டியது மனிதரின் மேலாய கடமை. You give food, you give life. உணவுதான் மனிதனுக்கு உயிர் கொடுப்பது.

இவர் World Central Kitchen (உலக சமையல்கூடம்) என்ற அமைப்பின் மூலம் அல்லலுற்றவர்களுக்கு உணவு வழங்கி வருகிறார். உக்ரைன் மீது ரஸ்யா படை எடுத்தபோது அங்கு முதலில் போனது ஹூஸே அண்டெரஸ், மற்றும் அவரது உலக சமையல்கூடத் தொண்டர்கள்தான். அந்த தொண்டர்களில் ஒருவர் பெயர் டொன் ஸ்டூவர்ட். இருபது வருடங்களுக்கு முன்னர் அவரை அமெரிக்காவில் சந்தித்திருக்கிறேன்.

ஒருநாள் டொன்னை டெலிபோனில் அழைத்து பத்திரிகைகள் எழுதுவதுபோல உண்மையி - லேயே அண்டெரஸ் உலகத்தின் அதிசிறந்த சமையல்காரரா என்று கேட்டேன். டொன் இப்படி பதில் சொன்னார். 'எனக்கு தெரியாது. ஆனால் அவர் என்ன சமைத்தாலும் அது சுவையாக இருக்கும். 'இதைக் கொண்டுவா, அதைக் - கொண்டுவா' என்று கேட்கமாட்டார். எது இருக்கோ அதை வைத்து சமைப்பார். ஆனால் உணவின் ருசி அபாரமாக இருக்கும். சில உணவுக்கு பெயரே கிடையாது. உடனேயே தனக்கு அந்தக் கணம் தோன்றிய ஒரு பெயரை சூட்டுவார்.

'நீங்கள் சமைக்கும் இடத்தில் ஆபத்து இல்லையா?'

'ஆபத்து இல்லாத இடம் என இங்கே ஒன்றுமே இல்லை. கீழே பெரிய பங்கர்கள் இருக்கும். அபாயச் சங்கு ஊதியதும் அங்கே போய் ஒளிந்துகொள்ளவேண்டும் என்பது கட்டளை. மீண்டும் வந்து வேலையை விட்ட இடத்திலி - ருந்து தொடங்குவோம்.'

'நீங்கள் உணவு வழங்கும் படம் ஒன்றை அனுப்பிவைக்க முடியுமா?' என்று கேட்டேன். அவரும் அனுப்பிவைத்தார். ஆனால் யார் உணவு வழங்குகிறார்கள், அதை யார் பெறுகிறார்கள் என்பது தெரியவே இல்லை. அகதிகள் என்றால் கிழிந்த ஆடையும், கலைந்த தலைமுடியும், கசங்கிய மேல்கோட்டுமாக நிற்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் அனைவருமே சிறந்த ஆடை அணிந்து கௌரவமான தோற்றத்தில் காணப்பட்டார்கள். 'யார் உணவு கொடுக்கிறார்கள், யார் பெறுகிறார்கள்?' என்று அவரிடம் கேட்டேன். அவர் சொன்னார் 'இடது பக்கம் இருப்பவர்கள் கொடுக்கிறார்கள். வலது பக்கம் நிற்பவர்கள் அகதிகள்.'



'சிகப்பு சட்டை அணிந்து சிரிக்கும் இளம் பெண்ணின் கணவன் உக்ரைன் ராணுவத்தில் போர் - புரிகிறான். இந்தப் பெண் சமையல் கூடத்துக்கு தினம் வந்து உதவுவார். ஒரு குறிப்பிட்ட நேரம் ஒவ்வொரு நாளும் அவரை கணவன் டெலிபோனில் அழைத்துப் பேசுவார். அந்தக் கணம் அவர் கணவன் உயிருடன் இருக்கிறான் என்பதில் மகிழ்வார். அடுத்த கணம் சோகத்தில் ஆழ்ந்துவிடுவார். ஆனல் நேரம் தப்பி ஏதாவது தொலைபேசி வந்தால் கெட்ட செய்தி என்று பதைத்து விடுவார். தினம் தினம் இந்தப் பெண் செத்துப் பிழைப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.'

ஒருநாள் மாலை டொன் அழைத்தார். அவர் வாழ்ந்த ரோட்டில் வசித்த ஒரு மூதாட்டி பற்றிய சம்பவம். அந்த வீட்டில் மூதாட்டியும் அவருடைய 10 வயதுப் பேரனும் மட்டுமே. அவர் துணிச்சலான கிழவி. ஒரு நாள் ரஸ்யப் படை ரோட்டிலே அணிவகுத்து போனபோது இவர் நடுரோட்டில் போய் நின்று உக்ரைன் மொழியில் திட்டினார். பீரங்கி வண்டிகளும், ஆயுதம் தாங்கிகளும், படைவீரர்களும் காத்து நிற்க இவர் வீதி நடுவில் நின்று கத்தினார். பக்கத்து வீட்டுக்காரர்கள் பாய்ந்துபோய் அவரை உள்ளே இழுத்து வந்தார்கள். ஏன் அப்படிச் செய்தார் என்று கேட்டதற்கு அவர் சொன்னார், 'இது என் நாடு. என் ரோட்டிலே நான் நிற்கிறேன். என்னைப் போ என்று உத்தரவிட இவர்கள் யார்?'

ஒருநாள் அபாயச் சங்கு ஊதியது. எல்லோரும் பங்கருக்குள் சென்று பதுங்கிக்கொண்டார்கள். மூதாட்டியின் வீட்டின் மேல் குண்டுவிழுந்து அவர் இறந்துபோனார், ஆனால் பையன் பிழைத்துக் கொண்டான்.

24 பிப்ரவரி 2023 உக்ரைன் போர் தொடங்கி ஒரு வருடம் பூர்த்தியான அன்று அவரை அழைத்தேன். அவர் அமெரிக்காவிற்கு திரும்பிவிட்டார். வீட்டிலே பெரிய சத்தமும், ஆரவாரமுமாக இருந்தது. நலம் விசாரித்துவிட்டு அந்த பத்து வயதுச் சிறுவனுக்கு என்ன நடந்தது என்று கேட்டேன். 'அவன் இங்குதான் என்னோடு இருக்கிறான்' என்றார். 'நீங்கள் தத்து எடுத்து வளர்க்கிறீர்களா?' 'ஆமாம், அவனுடன் இன்னும் இரண்டு சிறுவர்களையும் கொண்டுவந்து சேர்த்துவிட்டேன். என் வீட்டில் இப்போது மூன்று உக்ரைன் மொழி பேசும் அநாதை சிறுவர்கள்' என்றார். 'மூன்று அநாதைகளா?' 'இல்லை, என்னுடன்

( மறுபக்கம் வருக )


# கனடா - கந்தர்மடம் மக்கள் ஒன்றிய விழா!



**கனடாவில் இயங்கும் கந்தர்மடம் மக்கள் ஒன்றியத்தின் வருடாந்த விழா கடந்த மாதம் 25ம் திகதி ஸ்காபரோ பாபா விருந்துபசார மண்டபத்தில் பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் இடம்பெற்று இரவுப்போசனத்துடன் நிறைவுபெற்றது. விழாவின் சில காட்சிகள் இங்கு ஒளிப்படங்களாக.**












## மூன்று அநாதைகள்...

(13ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்து நாலு' என்றார்.

'எப்படி அவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைந்தார்கள்?' என்றேன். சில நிமிட மௌனம். 'நீங்கள் இலங்கைக் - காரர்தானே? உலகிலே அகதிகளை அதிகமாக ஏற்றுமதி செய்வது இலங்கை நாடு. உங்களுக்கு கூடவா தெரியாது?' என்று சொல்லிச் சிரித்தார். நானும் சிரித்தேன்.

நியூயோர்க் நகரில் Jose Andres 'You give food, you give life' என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் புறநானூற்றுப் புலவர் ஒருத்தர் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று பாடியிருப்பதை நினைத்தேன். ஸ்பெயின் தேசத்திலிருந்து அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்த இந்த மனிதர், உலகத்தில் எங்கே பேரிடர் நேர்ந்தாலும் அங்கே முதலில் நிற்பவர் - அவரும் அதையேதான் சொல்கிறார்.



முனைவர் பால. சிவகடாட்சம்

# படித்ததும் கேட்டதும் 61

## பொம்மை வண்டில்

“கற்பு நிலையென்று சொல்ல வந்தால், இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்” என்று இருபதாம் நூற்றாண்டில் பாடிவைத்தார் மகாகவி பாரதியார். ஆனால் இதைக் கூறும் துணிவு கடந்துபோன இரண்டாயிரம் ஆண்டுகளில் வேறு எவருக்குமே ஏற்படவில்லை என்பதுதான் உண்மை. இப்போதுகூடப் பாரதியின் கூற்றை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்பவர்கள் எத்தனைபேர் இருக்கின்றார்கள். அன்றும் இன்றும் இந்தக் கற்பொழுக்கம் என்று கூறப்படும் விடயத்தில் ஆண்கள் கண்டுகொள்ளப் படுவதேயில்லை.

“சேறுகண்ட இடத்தில் மிதித்துவிட்டுத் தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிச்செல்லும்” பொறுப்பற்ற தன்மை ஆண்களுக்கு இயல்பானதொன்றாகவும் அதற்காக அவர்கள் மன்னிக்கப்பட வேண்டியவர்களாகவும் கருதும் மனப்பாங்கு அன்றும் இருக்கத்தான் செய்தது.

தாய்மை என்னும் ஒரு பொறுப்பான பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் ஒரு பெண்ணுக்கு இவ்விடயத்தில் கட்டுப்பாடுகள் இல்லாவிடில் அவளது வாழ்க்கையும் அவளது பிள்ளைகளின் வாழ்க்கையும் திக்கற்றுப் போய்விடும் என்னும் ஓர் அச்சத்தின் விளைவே பெண்ணுக்கு விதிக்கப்பட்ட கற்பொழுக்க விதிகள் என்று ஊகிக்க இடமுண்டு. ஆண்கள் இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். தட்டிக்கேட்க இல்லாளைத் தவிர வேறு எவரும் இல்லாததால் இல்லத்தலைவன் பரத்தையிடம் செல்லும் வழக்கம் ஏற்பட்டது. அது இலக்கியத்திலும் தடையின்றித் தயக்கமும் இன்றிப் பேசப்பட்டது.

அதேசமயம் இதனால் பாதிக்கப்படும் இல்லறப்பெண்ணின் ஏக்கத்தையும் உள்ளக் குமுறலையும் எடுத்துரைக்கும் சான்றோர்களின் பாடல்களும் இலக்கியத்தில் இடம் பெறாமல் இல்லை. அவனுக்கு மனைவி அலுத்துப் போய்விட்டதால் மற்றுமொரு பெண்ணுடனும் தொடர்பு வைத்துக்கொள்ளு - கிறான். இது அவனை ஊரார் அறியத் திருமணம் செய்து கொண்டவளுக்குத் தெரியவருகின்றது. எதையுமே சகித்துப் போகும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளும் தாயால் வளர்க்கப்பட்ட இப்பெண்ணும் நடப்பதை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தைப் பெற்றுக்கொண்டாள்.

அவளை அவள் கணவனுடன் மீண்டும் சேரும்படி தூண்டு - மாறு அவளது தோழியை யாரோ கேட்டுக்கொள்கிறார்கள். அந்தத் தோழி அவர்களுக்குப் பதிலளிக்கின்றாள்.

“பொம்மை வண்டில் வைத்து விளையாடும் குழந்தை அதன் மேலேறிச் சவாரி செய்ய முடியாதபோதும் தனது வண்டில் என்று அதனை இழுத்து மகிழ்வதில்லையா? அதுபோல் அவனோடு வாழமுடியாவிட்டாலும் அவன் தனக்குச் சொந்தம் என்னும் நினைப்பே அவளுக்கு இன்பம் தருவதாய் இருக்கின்றது. அவள் கவலைப்படவில்லை. நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்” என்று கூறி அனுப்பிவைக்கின்றாள்.

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல
உற்று இன்புறேஎம் ஆயினும் நல் தேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றெனம் செறிந்தென வளையே
- ( குறுந்தொகை 61 )



“தச்சன் செய்து தந்த சிறு குதிரை வண்டிலில்
ஏறிச் சவாரி செய்யமுடியாவிட்டாலும் அதனைக்
கையால் இழுத்து மகிழும் சிறுவர் போல
நல்ல தேரோடும் பொய்கை ஊரனுடன்
சேர்ந்து இன்பம் அனுபவிக்காவிட்டாலும்
அவன் தன்னுடையவன் என்னும் நினைப்பே
அவளுக்கு இன்பம் தருவதாயுள்ளது.
அவள் கைவளை இறுக்கமாகத்தான் உள்ளது.”
(அதாவது அவள் கவலையால் உடல் மெலிந்துவிடவில்லை)
என்னும் பொருள்தரும் மேற்காணும் பாடல் சங்க இலக்கியமான குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது. புலவரின் பெயர் தும்பிசேர் கீரனார். உணர்வற்ற கணவனை கவிஞர் மரப் பொம்மையுடன் ஒப்பிடுவதை நோக்குக.

## The Toy Wagon

Poet Subramanya Bharathi sang in the 20th century, "If we are to say that there should be chastity, let us make it mutual for both man and woman." There are not many who would wholeheartedly accept Bharathi's statement. Even during the Sangam era, men were not taken into consideration within the boundary of this so-called “chastity”. The attitude of "trodden in muddy places and washed away in wet" was thought to be natural for men and they were excused from adherence to chastity. It is reasonable to assume that the rules of chastity imposed on women are the result of a fear that if there are no restrictions on a woman devoting herself to the responsible task of motherhood, her life and the lives of her children will be ruined. Men used this concession to their advantage. As there was no one to question the husband except his wife, he was free to approach other women. Instances when married men visiting brothels are spoken freely and unhesitatingly in literature. At the same time, the songs of poets expressing the longing and inner sadness of the housewife cheated by her husband are also seen in the literature. One of the relatives of the family comes to know about the problems faced by the lady of the house and requests her close friend to convince the lady to find ways to get her husband back. The friend was not impressed. This was how she responded.

Just like the children who enjoy pulling by hand
the tiny horse wagon made by carpenter
even if they can't get a ride on it
she gets pleasure in the thought that
the good charioteer from the town with ponds
belongs to her even if she can’t get pleasure from him
and her bangles stay tight (She is not distressed)
- ( Kurunthokai 61 )

## Grade 8A

வடக்கின் பெருஞ்சமர் என வர்ணிக்கப்படும் எங்கள் பரி. யோவான் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கட் போட்டியோடு எங்கள் கல்லூரியின் 200வது ஆண்டு நிறைவுவிழா குதூகலமாக ஆரம்பமானது. எங்கள் கல்லூரி போட்டியில் படுதோல்வி அடைந்தபோதிலும் எங்கள் கல்லூரிக் கீதத்தில் வருகின்ற "Johnians always play the game" என்ற வரிகளைப் பாடியவாறு மத்திய கல்லூரி மைதானத்தைவிட்டு வெளியேறினோம்.

கல்லூரியில் நாங்கள் 74 batch. எங்களில் முப்பது பேர் வெவ்வேறு தேசங்களிலிருந்து எமது கல்லூரியின் நிகழ்வுக்காக வந்திருந்தோம். இவ்வாறு ஒவ்வொரு வருடத்தவர்களும் தத்தமக்கென சமூக வலைத்தளங்களை ஆரம்பித்து தம் நண்பர்களை இணைத்து அழைத்து வந்திருந்தனர். பொக்ஸ், திண்ணை, ஜெட்விங் (hotels) எல்லாம் நிறைந்து வழியும் அளவுக்குச் சனம்.


கிரிக்கட் போட்டியின்போது என்னைக் கடந்துபோன என் பள்ளித் தோழர்கள் சிலரை என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. எல்லோரும் உருவத்தால் மாறிப்போயிருந்தோம். முகத்தை நெளித்துச் சிரிக்கும் உடுப்பிட்டியின் (ஜெயக்குமார்) அந்தச் சிரிப்பைக் கொண்டே என் நண்பர் குழாமைக் கண்டுபிடித்தேன்.

எல்லோரும் கொழும்பில் சந்தித்து ஒரு பஸ் பிடித்து சுற்றுலா போல் வந்திருந்தார்கள். முள்ளிவாய்க்கால், மன்னார், கீரிமலை, நெடுந்தீவு போன்ற பல இடங்களைச் சுற்றி வந்தார்கள். அது என் பாடசாலைக் காலத்து சுற்றுலா நினைவுகளைக் கிளறிவிட்டது.

எமது ஐந்தாம் வகுப்பில் முதலாவது சுற்றுலா ஆரம்பமானது. ஒல்லாந்தர் கோட்டையும் தூக்குமேடையும், நிலாவரைக் கிணறு, கீரிமலை, தோலகட்டி நெல்லி ரசத் தொழிற்சாலை, லேய்டன் ஆடைத் தொழிற்சாலை, சங்கிலியன் தோப்பு, ஜமுனா ஏரி போன்ற பிரசித்தி பெற்ற இடங்களைப் பார்வையிட்டோம். ஒம்னி பஸ் கொம்பனியின் இரு பஸ்களில் சுற்றுலா சென்றிருந்தோம்.

இறுதியாக A/L முதலாம் வருடம் படிக்கும்போது (1972) மூன்று நாள் அகில இலங்கை சுற்றுலாவை மேற்கொண்டோம். எங்களை ஆசிரியர்கள் சிறீதரன், மகேந்திரன், கணேசலிங்கம் ஆகியோர் அழைத்துச் சென்றனர். இரணைமடுக்குளம், வாழைச்சேனை காகித தொழிற்சாலை, கந்தளாய் சீனி தொழிற்சாலை, அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரி, சேனநாயக்க சமுத்திரம், லக்சபான மின்னுற்பத்தி நிலையம், சீதா எலிய, தேயிலைத் தொழிற்சாலை, பியர் வடிக்கும் ஆலை போன்ற இடங்களுக்குச் சென்றிருந்தோம்.

பஸ் மேளமாகிப் பொறி பறந்தது. பாட்டு, பைலா என்று ஒரே ஆரவாரம். 'விஸ்கி மேலே பிரண்டி - போடு' பாட்டுத்தான் உச்சம். ஒரு கட்டத்தில்



ப. ஸ்ரீஸ்கந்தன்

# ஞாபகம் துளிர்க்கிறதே !

24

பக்கத்திலிருந்த மோகன் "அடேய் மச்சான், வசந்தி மேலே என்னைப் போடுங்கடா" என்றான். எல்லோரும் சிரிச்சோம். மகேந்திரன் மாஸ்ரர் திரும்பி முறைச்சுப் பார்த்தார். பாட்டு நின்றுவிட்டது.

இப்படிக் கலகலப்பாகப் போன எங்களுக்கு அம்பாறையில் செக் வைக்கப்பட்டது. வைத்தது ஆமி அல்ல. யானைக்கூட்டம். வீதியை மறித்து அவை நின்றன. முப்பது யார்தான் இடைவெளி. பஸ்ஸின் எஞ்சின் நிற்பாட்டப்பட்டு எல்லோரும் அமைதியானோம். மயான அமைதி. யானைகள் பஸ்ஸை நோக்கி வருவதும் போவதுமாய் பயமுறுத்தின. இந்தப் பிள்ளைகளை எப்படியாவது பத்திரமாகக் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்று கிலி பிடித்தவர் போலானார் கணேசலிங்கம் மாஸ்ரர். அப்போது தன் இரு கைகளையும் தூக்கி யானையைக் கும்பிட்டவாறு "தோடுடைய செவியன்...." என்ற தேவாரத்தை அவர் பாடத்தொடங்கினார்.

அன்றிலிருந்து அவருக்கு தேவாரம் என்ற பட்டம் சூட்டினோம். இவ்வாறு எமது ஆசிரியர்களுக்கு டொக்கர், பனியர், பாம்பர், காமத்தம்பி என்றெல்லாம் பட்டங்கள் இருந்தன. எனினும் எமது ஆசிரியர்கள் எம்மை கண்ணியமாகவும் கட்டுப்பாட்டுடனும் எப்போதும் பார்த்துக் கொண்டனர். இன்றும் அதன் பலாபலன்களை உணர்ந்து கொள்ளும் அளவுக்கு கல்லூரி எங்களை வழிநடத்தியது.

எங்கள் வகுப்பு மாணவர்கள் மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், கணக்காளர்களாகவும் வாழ்வில் முன்னேறினார்கள். மிகவும் அமைதியாக இருந்த சக்தி பத்து நூல்களை வெளியிட்டு கவிஞன் ஆனான். சிறுவயதிலிருந்தே அழகாக ஓவியம் வரைகின்ற அருச்சுனன் நான் எதிர்பார்த்ததுபோல் ஓவியன் ஆகவில்லை. லண்டனில் ஒரு இன்சூரன்ஸ் கொம்பனியில் வேலை செய்வதாகச் சொன்னான். வகுப்பில் பின்னுக்கிருந்து குழப்படிகள் செய்யும் தம்பையன் ஆஸ்திரேலியாவில் பெற்றோல் நிலையம் ஒன்றை நடத்துகிறானாம்.

எமது பள்ளித் தோழர்களில் சிலர் இன்று எம்முடன் இல்லை. நோய் அவர்களைக் காவு கொண்டுவிட்டது. அவர்களுள் ரதலோட்சனனை என்னால் மறக்க முடியாது. சீனன் போல் தோற்றம் இருந்ததால் அவனை நாங்கள் சைனா என்று அழைத்தோம். பொத்துவிலைச் சேர்ந்தவன். விடுதியில் தங்கிப் படித்தான். பின்னர் ரஞ்சன் என்ற பெயரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து மாவீரன் ஆனான்.

வசந்தன் இப்போ எங்கு இருக்கிறான் என அறிய முடியவில்லை. அவனை நினைக்கும்போது எட்டாம் வகுப்பில் நடந்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்துவிடும். பொன்னம்பலம் மிஸ் எங்களுக்கு பொதுவிஞ்ஞானப் பாடம் எடுத்தா. மெலிதாக, உயரமாக, அழகாக கண்ணாடி அணிந்து வருவா. சிறுநீரகத் தொகுதி பற்றி ஒருநாள் படிப்பித்தா. சிறுநீர் கழிக்கும் குழாயின் ஊடாக விந்து வெளியேறும் என்று படம் கீறி விளங்கப்படுத்தினா. உடனே வசந்தன் எழுந்து, "அப்ப மிஸ் விந்து வாற நேரம் சிறுநீர் வந்தால் என்ன நடக்கும்" என்று அப்பாவி போல் கேட்டான்.



அன்று வசந்தனுக்குப் பயங்கர அடி விழுந்தது.

# இசைப்பேழை நூல் வெளியீட்டு விழா




திருமதி கௌரி சம்பந்தனின் 'இசைப்பேழை' நூல் வெளியீட்டு விழா இந்த மாதம் 15ம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணி முதல் பன்னிரண்டு மணிவரை ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இசைக்கலைமணி பட்டம் பெற்றவரான திருமதி.கௌரி சம்பந்தன் கர்நாடக இசைக்கல்வி சம்பந்தமாக இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார். கனடிய தமிழர்களின் மூத்த பல்வைத்தியரான டாக்டர் அ.சண்முகவடிவேல் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்குகிறார். இசை ஆர்வலர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். மேலதிக விபரங்களுக்கு 416 751 6656 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


# Women Empowered Socialist Club நடத்திய சர்வதேச பெண்கள் தினம் -'சமத்துவ அணைப்பு'

கனடாவில் இயங்கும் Women Empowered Socialist Club நடத்திய சர்வதேச பெண்கள் தின வைபவம் 'சமத்துவ அணைப்பு' என்ற மையப்பொருளில் கடந்த மாதம் 11ம் திகதி மார்க்கம் நகரில் இடம்பெற்றது. கவிதா செந்தில் தலைமையிலான இந்த அமைப்பின் நிகழ்வை கிறிஸ்டின் அவர்கள் தொகுத்து வழங்கினார். சமூகத்தில் ஆளுமை பெற்ற திருமதி யோகரத்தினம் செல்லையா, கலாநிதி பார்வதி கந்தசாமி ஆகியோர் விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். கனடிய மைய ஊடகவியலாளர் மஞ்சுளா செல்வராஜாவின் பிரதம உரையும், தமிழகத்தைச் சேர்ந்த பேச்சாளரும் கலைஞருமான சந்தியா ரகுநாதனின் சிறப்புரையும் இந்நிகழ்வின் குறிக்கோளை வெளிப்படுத்தின. மார்க்கம் நகர முதல்வர், கனடிய நாடாளுமன்ற உறுப்பினர், கனடிய நகரசபை உறுப்பினர் ஆகியோரின் வாழ்த்துரைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.
(ஒளிப்படங்கள்: 'புதினம்' குணா)














# கனடா கலைமன்றத்தின் நாற்பதா
## ஆறாம் திணையான கனடாவில் அரங்கேறிய

## தன்மானம், பழி, காதல், ஈகை, சூழ்ச்சி, வீரம் செறிந்த
# மதுரை ஆர். முரளிதரனின் 'சங்கத் தமிழ்' நாட்டிய நாடகம்

தன்மானம்







காதல்








பழி







பிரபல நடனக் கலைஞரும் போதனாசிரியருமான திருமதி. நிறைஞ்சனா சந்துருவை அதிபராகக் கொண்ட கனடா கலைமன்றத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மதுரை ஆர். முரளிதரனின் 'சங்கத் தமிழ்' நாட்டிய நாடகம் கடந்த மாதம் 26ம் திகதி கனடா றிச்மன்ட்ஹில் நிகழ்கலை அரங்கில் மேடையேறியது. சுமார் அறுபது வரையான நடன மாணவிகள் இந்த பிரமாண்ட படைப்பில் பங்கேற்றனர். 150 நிமிடங்கள் இடம்பெற்ற இந்த நாட்டிய நாடகம் நவீன தொழில் - நுட்பத்தின் உதவியுடன் கலைஞர்களின் நேர்த்தியான அறாத்தொடரான நடனமும் நடிப்பும் இணைந்து பார்வையாளர்களை அசைய முடியாதவாறு கட்டி வைத்திருந்தது. கலைமன்றத்தின் மூத்த மாணவியும் நடன ஆசிரியையுமான ஐஸ்வர்யா சந்துரு கலைஞர் முரளிதரனுக்கு இணையாக பங்கேற்று தனது திறமையை வெளிப்படுத்தி முரளிதரனின் பாராட்டை பகிரங்கமாகப்



( ஒளிப்படங்கள்: ரவி .

தில்





# வது ஆண்டு நிறைவு தயாரிப்பில்
## அகம் புறம் கூறும் ஐந்திணைக் கதைகள்

### Kalaimanram Canada Proudly Presents
## Madurai R. Muralidharan's 'Sangath Thamizh' Dance Drama

பெற்றது இந்நிகழ்வின் வெற்றிக்கு நல்லதொரு உதாரணம். கலைமன்றத்தில் நடனம் பயின்று அரங்கேற்றம் கண்ட பல மாணவிகள், அவர்களின் பிள்ளைகள் என பல கலைக்குடும்பங்கள் வெவ்வேறு பாத்திரங்களில் தோன்றியது இன்னொரு சிறப்பம்சம். ஈழத்தமிழர்கள் மீது தமக்குள்ள அன்பையும் அவர்களின் தமிழ்ப்பற்று, கலையார்வம் ஆகியவற்றை தாம் மெச்சுவதாகவும் முரளிதரன் தமதுரையில் சுட்டிக் கூறினார். மூத்த நடனக் கலைஞர் ஜனக் ஹென்றி, சங்கீதபூஷணம் வயலின் வித்துவான் தனதேவி மித்ரதேவா, தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் ஆகியோர் தங்கள் வாழ்த்துரை - களை பாராட்டுரைகளாக வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தனர். கலைமன்ற அதிபர் நிறைஞ்சனா சந்துருவின் நன்றியுரையைத் தொடர்ந்து பங்கேற்ற கலைஞர்கள் அனைவரும் பட்டயம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.





அச்சுதன், ஐயா4U )

ானா



சூழ்ச்சி





வீரம்



ஈகை








பழி







# MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

medcentrehealth.com

## Serving our community for more than 10 years!

**Urgent Care / Walk-In Clinic - Primary Care - Dermatological Care - Women's Care**



Our Founder & CEO Dr. Senthill Mohan, doctors and staff with Hon. Paul Calandra, the Minister of Long-Term Care & MPPs Hon. Logan Kanapathy (Markham-Thornhill) & Hon. Vijay Thanigasalam (Scarborough- Rouge Park) at the MEDCENTRE HEALTH 10th ANNIVERSARY celebration (4 doctors couldn't attend).

### Markham McNicoll Women's Health Clinic (MMWHC)

Women doctor & staff will address the issues or concerns of women with extreme confidentiality in a women-friendly environment. Started in July 2022

Pap Test, STD tests & treatment, Contraception consultation, IUD insertion & removal, Yeast infection treatment etc.

* Any patient can consult without any referral. *Referral accepted from any doctor.

* Clinic on Thursdays now. Soon on Mondays as well.

* Health card (OHIP) accepted. Call: (416) 331-8888 on weekdays. Fax: (416)331-8089

### Markham McNicoll Dermatology Clinic (MMDC)

*Our Dermatologist (Skin Specialist) treats all aspect of dermatology. His interests include skin cancers and pigmented lesions. Started in July 2020

* Referral accepted from any doctor (Family doctor, Walk-In doctor, or specialist doctor)

* Clinic on Tuesdays & Fridays now. Closed on Weekends & Statutory holidays.

* Health card (OHIP) accepted. Call: (416) 331-8888 on weekdays. Fax: (416) 331-8889.

### Markham McNicoll Family Care Clinic (MMFCC)

* Closed on Sundays & Statutory holidays.

* See our website medcentrehealth.com to book an appointment.

* Health card (OHIP) accepted. Tel: (416) 292-6666 Fax: (416) 292-7770.

### Markham McNicoll Urgent Care Clinic (MMUCC)

* Opens all 365 days. Any time change will be updated daily in our Google page.

* See our website medcentrehealth.com to book an appointment.

* Minimal wait time for booked appointments. Walk-In also accepted.

* Health card (OHIP) accepted. Tel: (416) 609-3333 Fax: (416) 609-3334.

**2901 Markham Road (Markham & NcNicoll intersection), Toronto, ON M1X 0B6**



உங்களிடம் ..

செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?

உங்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி!

வணிக உரிமையாளர்களும் சுயதொழில் செய்வோரும் வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.



அஜித் சபாரட்ணம்

647-401-5800 | 416-439-2800

10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை
உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.




### *At Need Funeral Arrangements*

We provide a full range of service
to families who have experienced a loss
of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service*
*• Reception • Burial • Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை







**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**


- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*


AGA
Beauty Skin SPA & Tranning Center
15, Karachi Drive, Unit 5, Markham
On L3S0B5
Body & Face Cream On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
ARAJEN BEAUTY & SKIN CARE
2607 Englinton ave east, Unit 4,6,7,
Scarbarough, On M1K2S2


JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


Build Your Dream Home
SABESAN'S CHOICE
We build 10,000sq. feet (minimum) warehouse from 139.00 per sq.feet.
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்ததாக மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் !
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
www.kevtax.com
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
FREE EFILE SERVICE
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


RAVE
Just Sold!
Another SOLD
$ 206,000
Over Asking Price
18 Brackenridge St,
Ajax, Ontario
Rossland & Salem
- Contact us for a Free Home Evaluation! (no obligation)
- For personalized Tour & Other Property Information Call Us today!
- Free home staging
Before you list Call me
You can see the Difference
Highest price in the same street
P.Raveenthiran
Real Estate Broker
416-567-2462
realtor.rave@gmail.com
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977 | Fax: 905.201.9229
HOMELIFE
HIGHER STANDARDS


Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


முருகன் புத்தகசாலை
MURUGAN
BOOK STORE
K. Makesan
Manager
5215 Finch Ave E #109, Scarborough ON
mahesan.ka@gmail.com
416 321 0285


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream



வேதநாயகம் தபேந்திரன் - இலங்கை

# தமிழர் தாயகத்தில் பாடசாலைகள் மூடுவிழா !

இலங்கையின் சமூக பொருளாதாரப் பிரச்சனைகளில் முதன்மையான ஒன்றாக ஆரம்பப் பாடசாலைகளின் மூடுவிழா உள்ளது.

அண்மைய வருடங்களில் 50 ஆரம்பப் பாடசாலைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் மூடப்பட்டதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்குரிய பிரதான காரணம் இப்பாடசாலைகளில் தரம் 01 முதல் தரம் 05 வரையான வகுப்புகளில் போதுமான மாணவர்கள் இன்மைதான் காரணமாக உள்ளது. பல்வேறு காரணிகள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவையாவன:

### பிறப்பு வீதத்தின் வீழ்ச்சி

குறைந்தளவு பிள்ளைகளைப் பெற்றால்தான் இக்காலத்தில் பல்வேறு தேவைகளையும் நிறைவேற்ற வாழ முடியுமென்ற மனநிலை எல்லோரிடமும் வந்து விட்டது. ஒரு காலத்தில் 10 பிள்ளைகளைக் கொண்டிருந்த சமூகக் கட்டமைப்பு பின்னர் 05 அல்லது 06 பிள்ளைகள் என வந்தது. தற்போது இது 02 இல் நிற்கின்றது.

### நகரப் பாடசாலைகளை நோக்கி மாணவர் சேருதல்

கிராமப்புறப் பாடசாலைகளை விடுத்து நகரப்புறப் பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கும் பண்பு பெற்றோரிடத்தில் வந்து விட்டது. ஏழ்மை நிலையிலிருந்த குடும்பங்கள் பல நடுத்தர வகுப்பு, மேல்நடுத்தர வகுப்பு நோக்கிய பொருளாதார நிலைக்கு உயர்ந்து விட்டன.

### போக்குவரத்தின் வளர்ச்சி

முன்னைய காலத்தில் கிராமப்புறங்களிலிருந்து நகரப் பிரதேசத்திற்குச் செல்வதற்குப் பொதுப் போக்குவரத்தையே பெரிதும் நம்பி இருந்தார்கள். ஆனால் தற்போது தனியார் பாடசாலை சேவைகள் தாராளமாக வந்து விட்டன. இதனால் நகரப்புறப் பாடசாலைகளை நோக்கிச் செல்வோர் தொகை அதிகரித்துள்ளது.

### பாடசாலைகளின் பௌதீக வளம்

கிராமப்புறப் பாடசாலைகளை விட நகரப்புறப் பாடசாலைகளில் பௌதீக வளங்கள் குறிப்பாக ஸ்மார்ட் வகுப்பறை வசதிகள் அதிகமாக வந்து விட்டன. இதனால் பெற்றோர்கள் நகரப்புறப் பாடசாலைகளை நோக்கி நகர்கின்றனர்.

### சமத்துவமற்ற அனுமதிக் கொள்கை

கிராமப்புறப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு ஒன்றில் 05 மாணவர்கள் கூட இல்லாத நிலை உள்ளது. அதே வேளையில் நகரப்புறப் பிரபல பாடசாலைகளில் 40 மாணவர்களைக் கொண்ட வகுப்பறைகள் ஐந்து முதல் ஆறு ஏழு வரை உள்ள நிலைமை. அரசியல், அரச அதிகாரிகள் செல்வாக்குப் போன்ற காரணிகளால் இந்த நிலை உள்ளது.

### வசதிகளைக் காட்டி மாணவர்களைக் கவருதல்

கிராமப்புறங்களில் பணவசதி படைத்த இடங்களில் உள்ளோர் பணவசதி குறைந்த இடங்களில் உள்ள மாணவர்களுக்கு இலவச போக்குவரத்துச் சேவை, மாதாந்த உதவு தொகை வழங்குதல் போன்ற வசதிகளைக் காட்டித் தமது பாடசாலைகளில் சேர்த்து விடுகின்றனர்.

இதனால் கிராமிய உள்ளக சமத்துவம் பாதிக்கப்படுகிறது. ஏழ்மை நிறைந்த இடத்துப் பாடசாலைகள் மூடுவிழாக் காணுகின்றன.

ஆரம்ப வகுப்புப் பாடசாலைகளின் மூடுவிழாக்களை நிறுத்த வேண்டிய பாரியதொரு சமூகப் பொறுப்பு எம்மவர் யாவருக்கும் உள்ளது. இதனைத் தடுக்கச் செய்ய வேண்டியவை.

அதிக பிள்ளைகளைப் பெறும் மனநிலை பெற்றோருக்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும். மூன்று பிள்ளைகளையும் அதற்கு மேல் பிள்ளைகளைப் பெறும் பெற்றோருக்குப் பிள்ளைகளின் கல்வி தொடர்பான செலவின் சுமைகளை நீக்குவதற்கான பொருளாதார வழிமுறைகளை ஏற்படுத்துதல்.

குறிப்பாகப் புலம்பெயர் தேசங்களிலிருந்து தாயகத்திற்கு உதவிகளைச் செய்யும் நிறுவன அமைப்புகளை இப் பணியில் ஈடுபடுத்துதல்.

### பாடசாலைகளின் வசதிகளை அதிகரித்தல்

கிராம நகர வேறுபாடு இன்றிப் பாடசாலைகளின் பௌதீக வளக் கிடைப்பனவு இருப்பதை உறுதி செய்தல். முதலாவதாக அரசாங்கத்தின் கொள்கை அமுலாக்கத்தில் இது சரியாக இருப்பதை உறுதி செய்தல். தனிப்பட்ட கொடையாளர்கள் வசதி குறைந்த பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்தல்.

### மாணவர் அனுமதியில் சமத்துவம் பேணுதல்

தரம் 01 மாணவர் அனுமதியில் பெற்றோர்களது வாழிடச் சூழலில் தான் பிள்ளை அனுமதி பெறலாம். பாடசாலைச் சூழலைத் தவிர்த்து வேறு இடத்தில் அனுமதி பெறமுடியாது என்பதைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்துதல்.

### வகுப்பறை ஒன்றுக்கான எண்ணிக்கை வரையறை

ஆசிரியர் மாணவர் விகிதத்தை நாடெங்கும் சரியான முறையில் இறுக்கமாகக் கடைப்பிடித்தல். பிரபல பாடசாலைகளில் அதிக மாணவர்கள் உள்ள அதிக வகுப்பறைகள் இருக்கும் நிலையை இல்லாமல் செய்தல். இதன் மூலமாகக் கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர் சேர்வதை ஊக்குவித்தல்.

### பல்கலைக்கழக அனுமதியில் முன்னுரிமை

மாணவன் ஒருவான் தனது வீட்டுச் சூழலில் 03 கிலோ மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட பாடசாலையில் முதலாம் வகுப்பு முதல் க.பொ.த.சாதாரண தரம் வரையில் கல்வி கற்றால் உயர்தர பரீட்சையின் பின்னரான பல்கலைக்கழக அனுமதியின் போது விசேட புள்ளிகளை வழங்குதல். இதன் மூலமாக மாணவர்கள் வீட்டுச் சூழலில் கல்வி கற்பதை ஊக்குவிக்கலாம்.

### உளநிலை மாற்றத்தை ஏற்படுத்துதல்

அதிக பிள்ளைகள் கற்கும் நகரப்புறப் பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகள், ஏனைய விளையாட்டுப் போட்டிகள், கலைத்திறன் போட்டிகள் போன்றவற்றின் போது சிறுதொகை மாணவர்களுக்கே வாய்ப்புகள்

(30ம் பக்கம் வருக)

# 10 important things about the Ontario budget

## The province's biggest budget ever has more money for health care, education and seniors.

**Finance Minister Peter Bethlenfalvy has introduced Ontario's post-pandemic spending plan, on 23rd of last month, which includes new money for health and education, as well as some targeted help for low-income seniors and stude**

### Here are the highlights:

- It's big: At $204.7 billion, it's by far the largest in the province's history — almost 30 per cent more than the Liberals' final $158.5-billion spending plan five years ago.
- For poorer seniors, the Guaranteed Annual Income System payments — $166 a month for individuals and $332 for couples — are being expanded so an additional 100,000 people will qualify in July 2024. Currently, 200,000 receive the benefit, which will also be indexed to inflation. The province is also pledging $1 million over three years for the Seniors Safety Line, a dedicated elder abuse hotline.
- For post-secondary students, the province is spending an extra $80 million over three years for additional nursing program spots, and adding 154 postgraduate medical training seats — to benefit Ontarians who trained here and abroad — and 100 additional seats for undergraduate medical students, primarily for Ontario students. It is also starting a new veterinary medicine program, pledging $14.7 million over two years, adding 80 vets spots over four years, particularly in the livestock/agri-food sector.
- Temporary pandemic paid sick leave, which provided three days off during the COVID-19 health emergency, is expiring on schedule on March 31.
- While the province is still finalizing the location for a new provincial park — the first in 40 years — it also plans to create a new "protected area" in the 905, in Uxbridge.
- The Ontario Immigrant Nominee Program will receive $25 million more over three years to speed up the application process for immigrants with skilled trades so they can start working.
- More than $25 million will be spent identifying and protecting residential school burial sites, as well as providing mental health help for Indigenous communities.
- To address pandemic learning losses, the province will spend $25 million over two years for reading supports for the youngest students, using a "consistent set" of assessments, twice a year. For math, $12.6 million over two years will help fund more math coaches, among other resources.
- The new "Ontario Made Manufacturing Investment Tax Credit" will provide a 10 per cent tax credit for local manufacturers, costing the treasury $780 million over three years.
- More than $48 billion has been set aside for hospital capital spending, in part helping more than 50 projects to add 3,000 beds. In education, $15 billion over the next decade to repair and refurbish schools, plus $2 billion over the next 10 years for colleges, universities and Indigenous institutes.

  The current capital backlog for Ontario elementary and secondary schools is estimated at almost $17 billion.


# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION



**Even if the accident is your fault:**



Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist

WE ARE HERE TO
HELP YOU

இலவச ஆலோசனைகளுக்கு:

தீபன்
24 Hours Direct Line

(416) 831-4444
(416) 505-9804

2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6

# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன்...

( 12ம் பக்கத்திலிருந்து )

சிந்தித்துப் பார்த்தால் "ஒரு வீம்புக்காகத்தான் மோடி அரசானது, தனி ஆர்வம் காட்டி ஒரு சிறிய விமானத்தை பறக்க வைத்து இந்த விமான நிலையத்தை உயிரோடு வைத்திருக்கிறது" என்றுதான் தோன்றுகிறது. நிலையத்தின் ஓடுபாதை மேம்படுத்தப்பட்டால் இந்தியாவின் பெரிய விமானங்கள்கூட சேவையில் ஈடுபடச் சந்தர்ப்பம் உண்டு. ரன்வே விஸ்தரிக்கப்பட்டால் எதிர்காலத்தில் வெளிநாட்டு சர்வதேச சேவைகளும் தரப்பட்டு பல்வேறு நாட்டு விமானங்களும் பலாலியில் தரையிறங்க முடியும். "இவற்றையெல்லாம் செயல்படுத்த, அவற்றை முனைப்படுத்துச் செய்ய வேண்டிய கடமை ஸ்ரீலங்கா அரசிற்கும், வடக்கு மாகாண சபைக்கும்தான் இருக்கிறதென்றாலும் அவை அக்கடமையைச் செய்வதாக இல்லை" என்பதையும் பதிவில் சுட்டிக்காட்டியிருந்தேன். அதை ஒரு பொதுமகனின் அரசியல் கருத்தாக பலரும் எடுத்துக் கொண்டார்கள்.

பதிவு வைரலாகிய பின்னர் அதற்கான பின்னூட்டங்களில் பலரும் பலவற்றையும் சொல்லியிருந்தார்கள். ஒருவர் தனது பின்னூட்டத்தில் "விடயங்களை சாதிப்பதற்கு நுண்ணியறிவு தேவை. உணர்ச்சியைக் கிளறாமல், அரசுகளை சாராமல், சூழ்நிலைகளை எமக்கு சாதகமாக்கி அரசியலை நகர்த்தினால் தமிழனம் தலை நிமிரும்" என்றிருந்தார்.

இவை ஒருபுறமிருக்க, பதிவில் நான் பகிர்ந்த படங்கள் பலரையும் கவர்ந்திருந்தன. அவற்றில் பலரையும் நெகிழ வைத்தது சென்னை விமான நிலையத்தில் கண்ட அறிவிப்பு காட்சிப்பலகைதான். அதில் என்ன இருக்கிறது? டுபாய், சிங்கப்பூர், சார்ஜா, கொழும்பு, கோலாலம்பூர் என்பவற்றோடு யாழ்ப்பாணம் என்ற பெயரும் சமவரிசையில் இடம் பெற்றிருந்ததைக் காட்டும் படம் அது. ஈழத்தமிழர்களின் எத்தனையோ ஆண்டுக் காலக் கனவு அல்லவா அது. விமான உலக அரங்கில் யாழ்ப்பாணம் முறையாக இடம்பெறுவதால் ஏற்பட்ட பரவசம்தான் அந்தப் படமும், எனது பதிவும் இப்படியொரு கவனத்தைப் பெற்றதற்கான காரணம் என்பேன் நான். மறுக்க முடியுமா?

ஆம். அந்தப் பதிவானது, நான் கண்டதைச் சொல்லியதாலோ அல்லது யாழ்ப்பாணத்தைப் பற்றி எழுதியதாலோ மட்டும் பிரபலமாகிவிடவில்லை. அப்போ? எனக்கென்னவோ தமிழீழம் என்ற தனிநாட்டுக் கருத்தியல் நம்மவர்களின் மனதின் அடியிலிருந்து இன்னும் மறைந்துவிடவில்லை என்றுதான் என் தர்க்க அறிவில் இப்போது தோன்றுகிறது.

# தமிழர் தாயகத்தில்...

(27ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கின்றது. ஆனால் கிராமப்புறப் பாடசாலைகளில் யாவருக்கும் எனக் கூறுமளவுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களுக்கான வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்க உளரீதியாக ஊக்குவிக்கப்படுகின்றனர்.

### பழக்க வழக்க ரீதியான கண்காணிப்பு

கிராமத்தை விட்டுத் தூர இடத்து நகரத்திற்குச் செல்லும் ஒரு மாணவனது பழக்க வழக்கங்களைக் கண்காணிக்க இயலாது. அதனால் தீய பழக்கங்களைப் பழகி ஒழுக்க நெறி பிறழ்ந்த ஒருவராகி மாறிவிடும் மாணவர்களையும் காணுகின்றோம். ஆனால் வீட்டுச் சூழலில் ஒரு மாணவன் கல்வியைப் பெறும் போது உறவுகளின் கண்காணிப்பு கிடைக்கும். நல்ல மாணவனாக இருப்பான். இதனைப் பெற்றோர் உணர வைத்தல்.

### மாணவன் சோர்வடைதல்

வீட்டுச் சூழலை நீங்கி ஒரு மாணவன் தூர இடத்துக்குச் சென்று கல்வியைப் பெற்றுத் திரும்பும் போது களைப்படைந்து சோர்வடைவார். உணவு உண்ணுதலும் நேர ஒழுங்கற்று இருக்கும் போது ஆரோக்கியம் தொடர்பான பல பிரச்சினைகளை எதிர்நோக்குவார். இது கற்றல் திறனைப் பாதிக்கும். இதனைப் பெற்றோர் உணரச் செய்தல்.

கல்வி மூலமான உயர்வு இலங்கையரின் சமூகப் பொருளாதார இடைவெளியைக் குறைப்பதில் பாரிய பங்களிப்பைத் தொடர்ச்சியாகவே செய்து வருகின்றது. ஆகவே பாடசாலைகளின் மூடுவிழா என்பதைத் தடுத்து நிறுத்துதல் வேண்டும். இதற்கு அரசாங்கம், பொதுமக்கள் கைகோர்த்துச் செயற்படல் வேண்டுமென்பதே காலத்தின் கட்டாயம்.



ALL YOUR CATERING NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1

FEEL GOOD
Taste Together

நந்தா உணவகம்
NANTHA RESTAURANT

**INDIAN / CEYLON TAMIL RESTAURANT IN GTA**

**Kipling & Steeles**
(416-NANTHA-1 **Ext. 2**)
#18 - 5010 Steeles Ave W Etobicoke, ON M9V 5C6

**Warden & Finch**
(416-NANTHA-1 **Ext. 3**)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave, Scarborough, ON M1W 2S8

**Middlefield & Steeles**
(416-NANTHA-1 **Ext. 4**)
#2 - 2002 MiddleField Rd Markham, ON L3S 1Y5

**(Beside Fresh Food City Super Store)**
(416-NANTHA-1 **Ext. 5**)
#8 - 2200 Brock Rd, Pickering, ON L1X 2R2

**Food Court - 6, Majestic City**
(416-NANTHA-1 **Ext. 6**)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6





**416 - NANTHA 1 | 416 - 626-8421**
**www.nantha.com**


தமிழீழத்தின் இசை வேந்தன்
வர்ண.ராமேஸ்வரன் நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
ஈழநாடு
பத்திரிகையின்
30வது ஆண்டு விழா
இசைச் சங்கமம் 2023
தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்
கலைமாமணி
ராஜேஸ் வைத்தியா
APRIL 23, 2023
6:00PM
CHINESE CULTURAL CENTRE
5183 SHEPPARD AVE. EAST
SCARBOROUGH
அன்பளிப்பு
VVIP $200
VIP $100
$50
தொடர்புகட்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters


**உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட**

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில்
பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# இஞ்சியின் மருத்துவ குணங்கள்

இஞ்சிச் சம்பல், இஞ்சி தேநீர் போன்றவை நாக்கைச் சப்புக் கொட்டிச் சாப்பிடுபவர்கள் பலரின் தேர்வாக இருக்கிறது. பிட்ஸா ஹட்டின் ஹார்லிக் பிரட்டின் (GARLIC BREAD) சுவை பிரசித்தம் அல்லவா? இஞ்சி போடாத இறைச்சிக் கறி சுவைக்கு உதவாது என்பார்கள் பலர்.

சமிபாடின்மை என்றால் “இஞ்சிச் சோடா கொண்டுவா” என்பார்கள். எமது நாளாந்த பாவனைகள் இவ்வாறிருக்க, சித்த ஆயுர்வேத வைத்திய முறைகளில் இஞ்சியின் பயன்பாடு அதிகம். தடிமன், காய்ச்சல், பசியின்மை, சமிபாட்டுப் பிரச்சனைகள் போன்றவற்றிற்கு இஞ்சி தொன்று தொட்டு பயன்படுத்தப்படுகிறது.

உண்மையில் இஞ்சிக்கு மருத்துவக் குணங்கள் உள்ளனவா? இருப்பின் அவை விஞ்ஞான பூர்வமாக ஏற்கப்பட்ட கருத்துகளா? அமெரிக்கன் AMERICAN FAMILY PHYSICIAN 2007; 75: 1689-91 இதழில் இஞ்சியின் மருத்துவப் பயன்பாடு பற்றிய பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

கர்ப்ப கால மசக்கையின் போது சத்தி, ஓங்காளம் போன்றவை பெருந்தொல்லை கொடுப்பதுண்டு. இந் நேரத்தில் கருவில் வளரும் குழந்தைக்கு மருந்துகளால் ஆபத்து ஏற்படலாம் என்பதால் தேவையற்ற மருந்துகள் கொடுப்பதற்கு மருத்துவர்கள் தயங்குவதுண்டு.

இத்தகையவர்களுக்கு எந்த மருந்தும் கொடுக்காமல் இருப்பதை விட இஞ்சி கொடுப்பது நல்ல பலனைக் கொடுக்கும் என 675 பேரைக் கொண்டு செய்யப்பட்ட வெவ்வேறு ஆய்வுகளில் நான்கு ஆய்வுகள் தெளிவாகக் கூறுகின்றன. அவர்களுக்கு விற்றமின் ஆ6 கொடுக்கும் அதே அளவு பலனை இஞ்சியும் கொடுக்கும் என வேறு ஓர் ஆய்வு கூறுகின்றது.

சத்திர சிகிச்சைகளுக்குப் பின்னர் பலருக்கும் ஓங்காளமும் வாந்தியும் ஏற்படுவதுண்டு. மருந்தற்ற மாத்திரைகளை (placbo) விட இஞ்சியானது அவர்களது அறிகுறிகளைக் குறைக்கும் என மற்றுமொரு ஆய்வு கூறுகிறது.

யாழ். திருமலை கப்பல் பிரயாணிகள் பலர் கப்பலில் வாந்தி வருவதை நினைத்துப் பயந்தே பிரயாணம் வேண்டாம் என அலறி ஓடுகிறார்கள். பிரயாணங்களின் போது கப்பல் அடங்கலாக வாந்தி வருவதை ஆங்கிலத்தில் motion sickness என்பார்கள். அத்தகைய வாந்திக்கு dimenhydrinate என்ற மருந்தும் பாவனையில் உள்ளது. இஞ்சியானது அந்த மருந்தை விட மேலான ஆற்றல் உள்ளது என மற்றொரு ஆய்வு கூறுகிறது.

ரூமற்வொயிட் மூட்டு வாதம் (Rheumatoid arthiritis) மற்றும் முழங்கால் எலும்புத் தேய்வு வாதம் (Osteoarthiritis of knee) ஆகியவற்றுக்கு இஞ்சி நல்ல பலன் கொடுக்கும் எனத் தெரிகிறது.

சரி

எவ்வளவு இஞ்சி சாப்பிட்டால் பலன் கிடைக்கும் என்று கேட்கிறீர்களா? பெரும்பாலான ஆய்வுகள் 250 மி.கி. முதல் 1 கிராம் அளவிலான காய வைத்து தூள் செய்யப்பட்ட இஞ்சியை கூட்டுக் குளிசையையாக தினமும் ஒன்று முதல் நான்கு தடவைகள் கொடுத்தே செய்யப்பட்டன. ஆழ் கடலில் கப்பலில் செல்லும் மாலுமிகளுக்கு வாந்தியைத் தடுக்க 1 கிராம் தினமும் நான்கு தடவைகள் கொடுக்கப்பட்டன.

பக்கவிளைவுகள் கிடையாதா என்பது சிலரது சந்தேகமாக இருக்கும். நெஞ்செரிவு, வாய் எரிவு, வயிற்றோட்டம் போன்ற பக்க விளைவுகள் சிலருக்கு ஏற்படலாம். ஆயினும் குருதி உறைதல் தொடர்பான பக்க விளைவு வோபெரின் (Warfarin) உபயோகிக்கும் நோயாளர்களுக்கு பிரச்சினை ஆகலாம். அத்தகையவர்கள் அதிகமாக இஞ்சி உட்கொண்டால் INR இரத்தப் பரிசோதனை செய்து பார்ப்பது உசிதமானது.

***ஒரு பிற்குறிப்பு:***

*இஞ்சிக் கிழங்கு என்று சொல்கிறோம். உண்மையில் இது சரிந்த பாட்டில் கிடக்கும் தண்டாகும். இதிலிருந்து வேர் கீழ் நோக்கி வளர்கிறது. இது ஆசியா போன்ற உலர் வலய நாடுகளில் வளரும் தாவரமாகும். மருத்துவக் குணங்கள் உள்ள போதும் அமெரிக்க அரசின் உணவு மற்றும் மருந்துகளுக்கான திணைக்களம் இஞ்சியை உணவுத் தயாரிப்பில் உபயோகப் - படுத்தும் பொருளாகவே வகைப்படுத்துகிறதே அன்றி மருந்தாக அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.*



## Gingerol has powerful medicinal properties

Ginger has a very long history of use in various forms of traditional and alternative medicine. It’s been used to aid digestion, reduce nausea, and help fight the flu and common cold, to name a few of its purposes.

The unique fragrance and flavor of ginger come from its natural oils, the most important of which is gingerol. Gingerol is the main bioactive compound in ginger. It’s responsible for much of ginger’s medicinal properties.

Gingerol has powerful anti-inflammatory and antioxidant effects, according to research. For instance, it may help reduce oxidative stress, which is the result of having an excess amount of free radicals in the body.


OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585

